தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 16-11-57 | சனிக்கிழமை | இதழ் 20

குதிரை ஓடிய பின் லாயத்தைப் பூட்டுவதா?

'காணாமற்போன முயல் பெரிய முயல்' என்பது பழமொழி. இறந்த காந்தியார் – கொல்லப்பட்ட 'பிதா'-ஐதிகத்திற்குப் பலியான உத்தமர் இப்போது காணாமற்போன முயலாகி புகழப்படுகிறார். காந்தியார் ஏன் புகழப்பட்டார், கௌரவிக்கப்பட்டார், என்பதை மறந்து காங்கிரஸ்காரர்கள் கண்களைப் மூடிக்கொண்டு 'ஜபம்' சொல்கிறார்கள். காந்தியார் அரசியல் துறையில் எந்த அளவுக்கு வெள்ளைக்காரனைக் கண்டித்தாரோ, அந்த அளவுக்கு உள்நாட்டில் சிக்கனத்தை வலியுறுத்தினார். 'அதிகப்படியான செலவு அழிவுக்கு அறிகுறி' என்று எச்சரிக்கை செய்தார். இன்றைய தினம், 'காந்தியார் எங்களுக்குத் தான் தந்தை, எங்களுக்குத் தான் வழிகாட்டி' என்று வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொள்பவர்களும், காந்தியார் படத்திற்கு கடுகளவு பாதகம் ஏற்பட்டாலும் அது தேச கௌரவத்தைக் கெடுத்துவிடும் என்று சட்டமன்றத்திலே 'முழங்'கும் 'கௌரவ'மிக்கவர்களும், காந்தியார் சொன்ன எந்தக் கொள்கையைப் பின்பற்றியிருக்கிறார்கள் என்பதற்குக் கடந்த பத்தாண்டு கால 'சுதந்திர இந்தியா'வில் எந்த ஆதாரமுமில்லை. கட்சிக்குள் பிளவு ஏற்படும் நேரங்களில் 'காங்கிரஸ்' என்ற கோரஸ் பாட்டு சுருதி குறைந்த வாத்தியப் பெட்டியின் துணை கொண்டு வாசிக்கப்படுகிறது; வெட்டு, குத்து ஏற்படும் வேளைகளில் 'காந்தியார்' என்ற வச்சிரப்பசை வெகு எளிதில் பிரயோகிக்கப்படுகிறது. இப்போது அந்த செப்படி வித்தைகளும் நாட்டில் செல்லுபடியாகவில்லை. காங்கிரஸ் - என்ற சொல்லும், காந்தியார்-என்ற புனிதப் பெயரும், தை மாதத்திய தமிழ்நாட்டுச் சர்க்கரைப் பொங்கலைப் போல் சிந்துவாரற்றுப் போய்விட்டன. மக்களுக்குச் சளித்துப் போய்விட்டது, ஒரு காரணம்; இன்னொரு காரணம் — யார் யாரை மக்கள் மதிக்கிறார்களோ, அவர்களையெல்லாம் காங்கிரஸ் தலைவர்கள் மதிப்பதில்லை. ஆகவே, தலைவர்கள் மதிக்கும் காங்கிரசை மக்கள் மதிக்கவில்லை. பம்பாயில் மொரார்ஜி தேசாயை மக்கள் தூக்கியெறிந்தார்கள். தெருவிலே கிடந்த அவரைத் தோளிலே அமர்த்திக் கொண்டார் நேரு. தமிழ்நாடு எனப் பெயர் வைக்க பட்டினி கிடந்தார் சங்கரலிங்கனார். அவரை அலட்சியம் செய்தார் காமராசர்.-இந்த உண்மையைக் காங்கிரஸ் தலைவர்கள் உணர்ந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். தேசத்தின் நலன் கித்தாப்பிலோ கீர்த்தியிலோ அடங்கியதல்ல; அதற்கு விவேகம் தேவை! அது காங்கிரஸ்காரர்களுக்கு மிக மிகத் தேவை!

காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் எத்தனையோ காரியங்களைக் கோட்டை விட்டிருக்கிறது! சில காரியங்களைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்தால் செல்வாக்கு வளரும்; ஆதரவாளர் பெருகுவர்; அன்பு நிலவும். அதே செயலை, பல எதிர்ப்புகள் ஏற்பட்ட பிறகு செய்தால் செய்தும் பயனற்றுப் போய்விடுகிறது. ஆந்திரப்பகுதிப் பிரிவினையிலிருந்து இந்திய அரசியலாரின் பிடிவாதத்தை மக்கள் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்கள். பிடிவாதக்காரன் வெற்றி பெறவேண்டுமானால் உட்பலம் இருக்கவேண்டும்; அல்லது வெளியார் உதவி இருக்கவேண்டும். இந்திய சர்க்காருக்கு இரண்டும் இல்லை. பின் எப்படி பிடிவாதம் வெற்றி பெறமுடியும்! காங்கிரசின் ஒவ்வொரு அத்தியாயமும் மூக்கறுபட்ட சம்பவங்களைத் தான் கூறுகிறது!

நாட்டின் வருவாயை - மக்கள் மனவளத்தை-உணராமல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் திட்டினார்கள். திட்டத்திற்குச் செலவாகும் தொகையை வரிமூலம் வசூலிக்க எண்ணினார்கள். பட்ஜட் வந்தது. எத்தனை கோடி ரூபாய்க்கு அதிக வரி போட்டிருந்தார்கள்? அவ்வாறு வரி விதிக்கக் காரணம் என்ன?- என்பது பிறகுதான் வெளிப்பட்டது. இராணுவத்திற்காகச் செலவாகும் தொகை அனைத்தையும், புதிய வரியின்மூலம் கிடைக்கும் தொகையைக் கொண்டு ஈடுகட்ட இந்திய சர்க்கார் நடத்திய இருட்டறை நாடகத்தை முதன் முதலில் கண்டு பிடித்தவர்கள் தமிழர்கள் தான். இராணுவத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் அதே 75 கோடி ரூபாய்க்குந்தான் புதிய வரிகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன என்பது தமிழர்களுக்குத் தெரியாததல்ல. வரிக் கொடுமை தாங்கமுடியவில்லையே என்றால், திட்டத்தின் வெற்றியே நாட்டின் செழுமை என்று தத்துவங்களைக் கக்கினார்கள். மேதா விலாசம் பெற்ற வேறு சிலர், திட்டத்தைக் குறைத்தால் நாட்டுக்கு அவமானம் என்றார்கள். உண்மை தான்; திட்டத்தின் வெற்றிக்காகவா காங்கிரஸ் அரசாங்கம் பாடுபட்டது? அழகான வெள்ளைப் புறாவைக் கையிலே வைத்துக் கொண்டு, ஆத்மீகத்தின் பேரிலும் தர்மத்தின் பேரிலும் பாரத்தைப் போட்டுவிட்டு இருக்கிற நேரு சர்க்கார் இராணுவத்திற்கல்லவா செலவு செய்கிறது!

பாகிஸ்தான், பாக்தாத் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு அமெரிக்காவின் ராணுவ உதவியைப் பெற ஆரம்பித்த பிறகு இந்திய சர்க்கார் தங்களின் ராணுவத்தைப் பலப்படுத்த ஆரம்பித்தார்கள். பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிடமிருந்து பல கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு வெடிகுண்டுகளையும், விமானங்களையும் வாங்கினார்கள். இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து வந்தது? ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகையிலிருந்து செலவிட்டிருக்கிறார்கள்; இந்த உண்மையை அமெரிக்காவில் இந்தியத் தூதராக இருந்த திரு. செஸ்டர் பௌல்ஸ் வெளியிட்டிருக்கிறார். திட்டத்தின் வெற்றியே நாட்டின் செழுமை என்கிறார்களே, யார் நம்புவது? எதிர்க்கட்சிக்காரர்கள் கண்டித்தால், 'இவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் அப்படித்தான் பேசுவார்கள்' என்கிறார்கள். எதிர்க்கட்சிகள் ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு மௌனமாக இருந்தால், 'எங்களுக்கு ஒரு எதிர்க்கட்சிகூட அமையவில்லை பார்த்தீர்களா?' என்று இறுமாப்போடு பேசுவதைப் பார்க்கிறோம். மகுடிக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கும் பாம்பைப் போல், 'மனிதருள் மாணிக்க'மான நேருஜியின் புகழுக்குக் கட்டுப்பட்டது இந்தியா என்று மார்பைத் தட்டிக்கொண்டு பேசுகிறார்கள். அவர்களே நேருவின் புகழை மகுடி என்றுதான் கூறுகிறார்களே தவிர நிரந்தரமானது

இலக்கியத்தில்.......!

மறைந்த சுவடிகள்

திருவிழா-அழகான பெயர். விழாக்களின் உட்கருத்துப் புனிதமானது என்று புகழ முடிய வில்லை. அவனியில் அவ்வப் பொழுது எழுந்து மறையும் இயல்பற்ற நிகழ்ச்சிகட்கும், புரியாதவர் புகன்ற பொய்க் கருத்துக்கட்கும் விழா எடுத்ததுமே அதற்குக் காரணம் போலும்!

ஆடித் திங்கள்! திருவிழாப் பட்டியலைத் 'திருக்கரம்' ஏந்தினுல் தெரிபவை: ஆடிப் பூரம், கோகுலாஷ்டமி, வரலட்சுமி விரதம், ஆடிப் பண்டிகை, ஸ்ரீஜெயந்தி—முபந்ததா என்ருல் இல்லை, ஆடித் திங்களில் தமிழகத்தில் புனிதமான பெயர் பூண்டு பழங்கால வரலாற்றை மண்மேடாக்கும் மகத்தான விழா "பதினெட்டாம் பெருக்கு" என்பதுதான் எஞ்சிய விழா.

தமிழன் தன் வாழ்ந்த கால வரலாற்றினை இன்று இயம்புதற்குத் துணையாகச் சிலப்பதிகாரத்தையும். சிந்தாமணியையும், புறத்தையும், தொல்காப்பியத்தையும் தொடராகத் தொட்டுச் செல்வதைக் காண்கிறோம். அந்தப் பெரும் இலக்கியப் பேழைகள் இருந்த இடம், 'பனை ஓலைச் சுவடிகள்' என்பதை அனைவோரும் அறிவர். எண்ணங்கள் எழுந்த விஞடியெல்லாம், எலும்பு வளைய, நாடி சுருங்கப் பாடி வைத்த சுவடிச் சொத்துக்களே பனைச் சுவடிகள்.

தமிழகத்தின் வரலாற்றில் 'இருண்ட காலம்' என கி. பி. 3, 4, 5, 6, நூற்ருண்டுகளைக் கூறுகிருர்கள். காரணம் அக்காலத்தே எழுந்த இலக்கியங்கள் இல்லாமையோ, இதுவரை கிடைக்காமையோ, தமிழரற்ற பிறர் ஆட்சியோ என்ற ஐயம் இருந்து வருகின்றது. முச்சங்கங்கள் ஒரு புறமிருக்க, முதல் இரண்டு சங்கங்கள் இருந்தனவா? என ஓர் இல்லாமை விஞ மறுபுறம் எழும்புகிறது. வரலாற்று விற்பன்னர்கள் இருவேறுபட்ட விடைகளையும் தருகின்றனர் என்ருலும், முதல், இரண்டாம் சங்கங்களில் தோன்றியன எனக் கூறத்தக்க இலக்கியங்கள் இல்லாமையே இம்மயக்கத்திற்குரிய காரணம் என்கின்றனர். இந்த நிலையை நன்கு ஊன்றிப் பார்த்தால் உட்கருத்தாகச் சில தோற்றுகின்றன.

தமிழர்கள் விட்டுச் சென்ற இலக்கியச் சுவட்டில் சென்ருல் அவர்கள் வரலாறு ஒளிககதிர்களைச் சிறிது காட்டுகிறது. தமிழன் கலம்கட்டி, கடலில் ஓட்டி, கடல், முத்து முதல் சந்தனக்கட்டை ஈருக யவனம் போன்ற, கிரேக்கம் போன்ற வெளிநாடுகளில் விற்ருன் என்பதையும், வெளிஉலக விபரங்களை அறிந்து தூதுவர்களைப் பெற்றும் விடுத்தும் வாழ்ந்தான் எனவும் வரலாற்று விற்பன்னர்கள் வரைகின்றனர். இதற்கு ஆதாரம் இலக்கியச் சுவடிகள் தாம். 'தொல்காப்பியம்' என்ற இலக்கண நூலை ஆக்கிய தமிழன் நாகரிகத்தின் நல்ல பகுதியில்தான் வாழ்ந்திருக்க வேண்டும். தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் எழுந்த காலம் கி. மு. 2 அல்லது 3 என்டார்கள். அந்த இலக்கண நூல் 'தொல்காப்பியம்' என்று தொடங்கினுல், அந்த நூலுக்கு முன் அதற்கு முன்னேடியாக முகிழ்த்த எத்தனையோ அமர இலக்கியங்கள் இருத்தல் வேண்டும்! 'இலக்கியங் கண்டதற்கன்றே இலக்கணம் எழுதல் இயற்கை' என்பது வழி வழி மரபாகும். அதற்கு முன் உருவான இலக்கியங்கள் எங்கே என்ற விஞ எழுந்து விடை காண முயல்கின்றது.

இந்த விஞவின் விடையாகவே "ஆடித் திருவிழா" அமைகின்றது. 'பதினெட்டாம் பெருக்கு'—அழகான பெயர். காரண இடுகுறிப் பெயர். உண்மையிலேயே இந்த விழா எப்படி இருந்திருக்கும்? இது தமிழர் விழாவேதான். உழவனின் உவப்பு விழா! உயிர் வாழப் பயிர் விளைய மழை தேவை. ஆடியில் மழை மிக்குப்பொழிந்து கலிங்கில் பதினெட்டுப் படிகள் வழிந்து ஓடுமாம். பின் விளைவு செழிப்புறும் என்று அறிந்ததமிழ் மகன் விழாவெடுத்தான். அன்று உழவோ பிற உழைப்போஇன்றி அறுசுவை உண்டு-ஆடிப்பாடி ஆற்றை நாடித் தண்ணீர் பதினெட்டுப் படி ஓடி வழியும் காட்சியைக் கண்டு களிப்பர் போலும்.

ஆனுல் தென்னகத்தினை இருளாக்க முனைந்த வந்துபுகுந்த வடவாரியக் கூட்டம் விளைத்த வினையே விழாவினை விழாவாக்கிற்று போலும். தங்கள் சொற்கள் சொத்தை என மற்றவர் உணராவண்ணம் மகேசன் பெயர் கூறி மக்களை மயங்க வைத்தனர். உழைத்துப் பிழைக்கும் தமிழர்களிடையே பிழைக்க வகையற்ருேர் விளைத்த கேடு, கலையாகவே தொடங்கி மரமாகி விட்டது. 'பதினெட்டாம் பெருக்கு' விழாவிற்குரிய கடவுள் வருண பகவானன்றே! விழாவினைக் கொண்டாடுவது என்ருல் ஓலை எழுதிப் போற்றிப் புகழ்ந்து-வருணனை வாழ்த்துவது சிறப்பானது என்று தொடங்கி, வாழ்த்து வரைய வழி இல்லாவிட்டால் பழைய ஏடுகளையாவது ஆற்றிலிடல் அவசியமானது என்று அதிகாரக் குரலில் கூறத் தொடங்கினர் ஆரியர். அன்று அவர்கள் கூறினவர் குரலில் அதிகாரம் இல்லை தான், கனிமொழி சிந்தி தமிழர்கள் சிந்தனையில் மண் தூவிச் சிறப்பான வாழ்வைச் சிதறடித்த கேடு தாங்களே தமிழகத்தில்-உலகத்தில் உயர்ந்தவர்கள் எனவும் பிறர் எண்ணச் செய்துவிட்டனரன்ருே?

அந்தப் 'பதினெட்டாம் பெருக்கின்' விளைவுதான்... தமிழனது முதல்இலக்கண நூல்எனக் கருதப்படும் "தமிழர் நான்மறை" ஐம்பெருங்காப்பியங்களில் தவறிய "வளையாபதி", "குண்டலகேசி", "முத்தொள்ளாயிர நூலில் பெரும்பகுதி", "பதிற்றுப்பத்தில் இரண்டு பத்துக்கள்" இன்னபிற காணுத—ஆனுல் இருந்தன என இருக்கின்ற இலக்கிய மேற்கோள்கள் கூறுவன அனைத்தும் எங்கே? இந்த இலக்கியச் சுவடிகள் மறைந்தமைக்குக் காரணம் என்ன? "காக்கை அமரப் பனம்பழம் விழ"—என்ற பழமொழிக்கேற்ப, வரலாறு வரைவோர் சங்கங்கள் தோன்றிய பகுதியில் கடல்கோள் ஏற்பட்டதால் "காணுதவை அனைத்தும் கடலினடியில்" எனக் கூறுகின்றனர்.

ஆண்டுக்கொருமுறை ஆடித் திருவிழா அழைப்பு அனுப்பத் தவறுவதில்லை. ஆடித் திருவிழாவில், சோடித்த தேரில், சுவடிக்கட்டுகளை ஏற்றி, ஊரைச் சுற்றி ஆற்று வெள்ளத்தில் அமிழ்த்தி விட்டு மகிழ்ச்சி பொங்கவரும் மாணவர் தொகையைக் கண் முன் கண்டதுண்டு. இன்றுண்டா என்பதுதான் ஐயப்பாடு. என்ருலும் வாழ்ந்து வளம்பெற்ற சமுதாயம் வரலாற்று அளவோடு அமைதி பெற்றதற்குக் காரணமான ஆடிவிழா தவறுடைய வழிச் செல்ல தமிழர்கள் ஏன் வழிவிட்டனர்? 'குற்றம் குற்றமே' எனக் கூறிய நக்கீரர் பரம்பரை குமுறி எழாத நிலைக்குரிய காரணம் என்ன?—என்ற விஞ எழத்தான் செய்கிறது. அதற்கு விடையாகவே "பதினெட்டாம் பெருக்கு" விழா ஒலி எழுப்புகின்றது. வாழ்ந்த இனத்தின் வரலாற்றுச் சுவடிகளை விழுங்கி விட்ட விழாவை எண்ணினுல் விம்மலே எழுகின்றது.

—கதிரவன்

★ ★

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

என்று கூறவில்லை. மகுடி எத்தனை நாளைக்கு? அதையும்தான் பார்ப்போமே என்று எத்தனையோபேர் காத்திருக்கிருர்கள்.

மன்னர்கள் மகேஸ்வரனின் தூதர்கள் என்று சொல்லப் பட்டது. மக்கள் அதனுல் மன்னர்களின் கொடுமைகளைத் தாங்கினுர்கள். அப்பாவிகள்! பிள்ளைப்பூச்சிகள்! பண்டிதநேரு அப்படிப்பட்டவராக இருந்தால் இந்தக் காலத்திலும் பாதசேவை செய்ய ஆள் கிடைக்கும், மறுக்கவில்லை. ஆனுல் அவரே தன்னை 'மக்கள் தொண்டன்' என்று கூறி அல்லவா கெடுத்துக் கொண்டுவிட்டார். இனிமேல் மக்கள் எப்படி நம்புவார்கள். பெண்ணைப் பேயென்றும் அவர்கள் தான் திட்டுகிருர்கள்; பேயைத் தெய்வமென்றும் அவர்களேதான் வர்ணிக்கிருர்கள். நேருப் பண்டிதர் செய்த பெருந்தவறுகளில் இதுவே பிரதானமானது; தன்னை மனிதரென்று மக்கள் கருத நினைத்தால், மனிதர் செய்யும் காரியங்களையே செய்திருக்கவேண்டும்; அல்லது தன் இஷ்டப்படிதான் நாடு நடக்க வேண்டுமென்பதே அவரது ஆசையானுல் அவர் தன்னை ஜனநாயக வாதி என்று பறையடிக்கக்கூடாது. நானே ராஜா என்ருல் யார் கோபித்துக் கொள்ள இருக்கிருர்கள்? எல்லோரும் அவருக்கு சேவகர்கள் தானே!

காங்கிரஸ் - புனித இயக்க மாகக்கூடக் கருதப்படலாம். எத்தனை நாளைக்கு அந்தப் 'பூஜா மனேபாவம்'!

காந்தியார் உலகப் பெரியார் தான்—அந்த பக்தியும் எத்தனை ஆண்டுகளுக்கு?

வெள்ளையர் ஆட்சியை 'சாபக் கேடு' என்று அவர் சொன்னுர். அதற்கு அவர் வெள்ளையரின் ஆடம்பரச் செல்வுகளைத்தான் காரணமாகக் காட்டினுர். இப்போது இங்கே என்ன வாழுகிறது? வேல்ஸ் துரையின் உடையில் பண்டித நேரு செலவு செய்கிருர்.

நேருப் பண்டிதர் அவர்கள் பிறவியிலிருந்து வெள்ளைக்காரனைப்போல் வளர்ந்தவர், வாழ்ந்தவர் என்ருர்கள். உண்மை தான். வெள்ளைக்காரர்களிடமிருந்து எதை எதைப் பின்பற்ற வேண்டுமோ அவைகளைச் செய்யவில்லை. வேண்டாததையெல்லாம் உடன் சேர்த்துக் கொண்டார்.

ஆங்கிலேயர்கள் எவ்வளவுதான் பெரிய செலவாளிகளாக இருந்தாலும் நாட்டின் நலனுக்காக எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய அவர்கள் தவறியதில்லை. கிரிப்ஸ் மந்திரியாக இருந்த காலத்தில் திடீரென்று பண நெருக்கடி ஏற்பட்டது ஆங்கிலேயர்களுக்கு. பணக்கார வீட்டுப் பெண்கள் அதிக விலையுள்ள துணியில் சிறிது அளவு வெட்டிக் கொடுத்துப் பண நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமென உத்தரவு போட்டார். எடின்பரோ கோமகன், அவரால் ஒருகண நேரம்கூட இல்லாமல் முடியாதசிகரெட்டை நிறுத்தினுர்.

ஆயிரக்கணக்கில் செலவு செய்து எம். எல். ஏ.க்கள் ஆனவர்கள் தானே காங்கிரஸ்காரர்கள் சர்க்காரின் பண நெருக்கடியைத் தீர்க்க சட்டமன்றப் படிப் பணத்தையாவது தியாகம் செய்யட்டுமே! கேவலம்! கேவலம்!!

திட்டத்தைக் குறைத்தால் நாட்டுக்கு அவமானம் என்ருர்கள். இன்று எந்தத் திட்டத்தைத் துண்டுப்பது, அதுவும் தென்னுட்டுத் திட்டத்தைக் குறைக்கலாமா என்று ஆலோசனை நடத்துகிருர்கள். குதிரை ஓடியபின் லாயத்தைப் பூட்டுகிருர்களே! பாவம்!

—தென்னரசு

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 4 ‖ 16—11—57 ‖ இதழ் 20

கொலை - தற்கொலை

தெண்டிரை அவனி முற்றும்
    தேடினார்! வணக்கும் கேட்டார்!
மண்டலம் முழுதும் பார்த்து
    வந்தவர் சொன்னார் "எங்கள்
வண்டமிழ் நாட்டி லேதான்
    வாழ்வினை வெறுத்த மாந்தர்
கொண்டதற் கொலையும் மாதர்
    கொலையுமா யிரங்கள்" என்றே!

போரிலே மாண்டார் கேட்டோம்
    புகழுடம் படைந்தார் கேட்டோம்
சீரிலா வாழ்வை நீத்தே
    சென்றதற் கொலையா கேட்போம்?
வேரிலா மரம்போல் எங்கள்
    வீரர்கள் செயற்கைச் சாவில்
ஊறினார் தம்பீ! உண்ண
    உணவிலா தொழிந்தார் தம்பீ!

பசியெனத் துடித்து மாண்ட
    பழந்தமிழ் வரலா றுண்டா?
புசியெனத் தருவ தான
    புகழலால் பசிதா னுண்டா?
'இசைகுடி மான'ந் தேரும்
    இயற்புகழ் உறவோ ரின்று
வசைபடு சாவில் மாயும்
    வன்மையா தமிழர் வாழ்வு?

ஐயிரு திங்கள் தூக்கி
    அடுத்தநாள் தரையில் தேக்கி
மெய்யிடை இதயம் வைப்பார்
    விழியிலே உலகங் காண்பார்
கையிடைக் குழவிப் பாங்கின்
    கலையிடை மணக்கும் தாயர்
செய்யிடை விளைந்த நெல்லைச்
    சேற்றிடை வடிப்பா ரானார்!

மங்கல அணியல் லாது
    மற்றுமோர் அணியில் லாதார்
செங்கனி அமுதச் சாற்றில்
    தேர்ந்தநாள் மணநாள் என்றால்
கொங்கையின் முகங்கள் கூம்பிக்
    குழவியர் இதழால் தேரும்
மங்கையர் திருநாள், கையில்
    மழலையர் வருநாள் அன்றோ!

எத்தனை கதிர்கள் கண்டார்!
    எத்தனை மதியங் கண்டார்!
எத்தனை நாட்கள், பிள்ளை
    எழிலுறத் துன்பங் கொண்டார்!
அத்தனை துயரும் தீர
    அன்னையே குளங்கள் தேடி
சித்திரக் குழந்தை தன்னை
    சிதைத்தனள் என்றால், தம்பீ!

நாடல்ல ஈது! பொய்மை
    நரகத்தின் உண்மை ஆக்கம்!
வீடல்ல ஈது! சாவில்
    வீழ்பவர் துலங்கும் பாதை!
காடென்னும் இதனை ஆளும்
    கயவர்கள் ஒழிந்தா லன்றி
ஏடெல்லாம் கொலையும், சூழும்
    இல்லெல்லாம் களையும் சேரும்!

நாண்விடு நன்னெஞ்சே!

வாழ்க்கையில் ஏதாவது ஒன்றை அடைவதற்கு மற்றொன்றை இழக்கவேண்டி வருகிறது. பொதுவாழ்வில் ஈடுபடுபவர்கள், அந்தப் பொது வாழ்விற்காக தங்களது சொந்த நலங்களை இழந்து வருவதைப் பார்க்கிறோம். இந்த நிலை பல துறைகளிலும் காணப்படுகிறது.

அசைகின்ற செடியிலே மலர்கிறது அழகான ரோஜா. அதைப் பறிக்க முற்படுவதற்குள், பறிப்பவரின் கைகளிலே ரோஜாவைக் காக்கும் முள்ளின் திருத்தொண்டு நிறைவேறுகிறது மலர் வேண்டும் என்றால் வலியைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

ஓலமிடும் பெருங்கடல்! அதன் உள்ளே அரும் முத்துக்கள். அவற்றின்மேல் மக்களுக்கு எவ்வளவு ஆர்வம்! அந்த ஆர்வம் முத்துக்களை வெளிக்கொணர முந்துகிறது. உயர்வான முத்தை எடுக்க மனிதன் கடலுக்குள் படும் அவதி, அவன் உயிருக்கே ஆபத்து வருகின்ற நிலை இவற்றை எண்ணும்போது முத்தினை எண்ணி, மனிதன் வாழ்க்கை இன்பத்தை ஒத்தி வைத்துச் செல்கின்ற சீர்மை புலனாகிறது.

கூழ்குடிக்க ஆசையாகத்தான் இருக்கிறது. ஆனால் மீசையில் படாமல் குடிக்க முடிவதில்லை. இந்த நிலையில் கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்றால் அது முடிகிற காரியமா? ஒன்று கூழைக் குடிக்காமல் நிறுத்த வேண்டும், இல்லாவிட்டால் கூழ் மீசையில் படுவதைப் பொருட்படுத்தாது இருக்கவேண்டும். ஏதாவது ஒன்றைத்தான் செய்ய வேண்டும்,-செய்யமுடியும்! இது தான் நியதி!

இந்த நிலை புறவாழ்வில் மட்டும் தான் என்று எண்ணிவிட வேண்டாம். அகவாழ்விலும் இதுவேதான் நிலை. தம் காதல் நிறைவேற தலைவன் தலைவியர் எவ்வளவோ தியாகங்கள் செய்ய வேண்டி வருகிறது. வள்ளுவர் காட்டும் தலைவி, மேலே சொன்ன ஒரு இக்கட்டான நிலைமைக்கு ஆளாகிறாள்.

தலைவி, தலைவன்மேல் காதல் கொள்கிறாள். தலைவனை அணுகப் பலமுறை எண்ணுகிறாள். அடி எடுத்துவைக்கிறாள். அதற்குள் ஏதோ ஒன்று அவளைத் தடை செய்துவிடுகிறது. தடைசெய்யும் பெற்றோர்கூடத் தடைசெய்யவில்லை - ஆனால், வேறொன்று தடைசெய்துவிடுகிறது. தலைவன் இருக்குமிடம்செல்கிறாள். அவன் அமர்ந்திருப்பதையும் காண்கிறாள். அவன் முன்னால் செல்லத் தூண்டுகிறது அவளது காதல் இதயம். ஆனால், செல்லுகின்ற கால்களுக்குத் தடை உத்தரவு பிறப்பித்து விடுகிறது அவளது பெண்மை. ஆமாம்! பெண்மைக்குரிய நாணம்தான் அவளுக்கு அந்த உத்தரவைப் போடுகிறது. பாவம் தலைவி! துடிக்கிறாள்! திண்டாடுகிறாள்! செய்வதறியாது தவிக்கிறாள்! அவள் உள்ளத்திலே ஓராயிரம் எண்ணங்கள்! அத்தனையும் காதல் போராட்டத்திலே கனிந்தவை. அந்தப் போராட்டத்திலும் தன்னைச் சீராக்கிக்கொள்கிறாள். நெஞ்சத்தை முன்னிலைப்படுத்தி அதற்கு அறிவுரை கூறுகிறாள். நெஞ்சத்திற்கு நிபந்தனைகூட விதிக்கிறாள்.

"நெஞ்சமே! ஒன்று, காதல் எண்ணத்தை விட்டுவிடு! இல்லாவிட்டால் நாணத்தை விட்டுவிடு! இந்த இரண்டையும் ஏக காலத்தில் என்னால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை" என்று நெஞ்சத்திடம் அவள் சொல்வதை எண்ணும்போது அவளது இதய தாகத்தையும், அதை நிறைவேற்ற அவள் செய்யும் தியாகத்தையும் நம்மால் கணக்கிட முடிகிறது. இந்த நிகழ்ச்சியை விளக்கும் குறள் பாடல் இது:

காமம் விடுவொன்றோ
நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு.

—தமிழ்ப்பித்தன்

விற்பனையாளர் தேவை

திராவிட முரசு

(மாதம் இரு ஏடு)

நிர்வாகி, திராவிட முரசு,
23-97, மாதவரம் நெடுஞ்சாலை,
சென்னை-11.

இதுதான் திராவிடநாடு

கா. அப்பாதுரையார்

- 8 -

'ஆரியமாவது, திராவிடமாவது' அதெல்லாம் மலையேறி விட்ட காலம். இப்போது யார் திராவிடர், யார் ஆரியர்? எப்படி அறிவது? இரண்டின் கலவை மீது தானே இன்றைய பாரத சமுதாயம் கட்டி வைக்கப்பட்டுள்ளது?' என்று கூறும் நல்லோர்கள், பெரியோர்கள், அருளாளர், சமரச வாதிகளை நாம் அங்கங்கே காண்கிறோம், வடக்கிலும் தெற்கிலும்!

இவர்கள் பெரும்பாலும் படித்தவர்கள், ஆரிய திராவிட வேறுபாட்டை வரலாற்றில் கண்டுணர்ந்தவர்கள். பாரத பக்தி, காங்கிரஸ் பற்று இத்தகையவர் கண்டு தாம் காணும் வேற்றுமை கடந்து, ஓர் உருவமைவுத் தேசியத்தைக் கனவு காணத் தூண்டியுள்ளது—அவ்வளவே. அக்கனவு நனவாக வேண்டுமானால், அவர்கள் காணும் ஒரே வழி, வேற்றுமை அகற்றுவதல்ல, வேற்றுமை காணாதிருப்பதே. வேற்றுமை அகற்றவல்லவர், வேற்றுமை அகற்றவல்ல இயக்கம் காங்கிரஸ் தேசியமன்று. முற்போக்குடையவரென்று தப்பட்டையடித்துக்கொள்ளும் அதன் முன்னேடும் பிள்ளைகளான சமதருமவாதிகள், பொதுவுடைமையாளரல்லவர். அரசியல் சார்பற்ற ஆரியப் போர்வை போர்த்த சமய வாதிகளோ, சமஸ்கிருத வெறியர்களோ, இந்தி வெறியர்களோகூட அல்லர். ஏனெனில் இவர்களெல்லாம் நல்ல பாரத பக்தர்கள் காணும் வேற்றுமையை, கண்டு புறக்கணிக்க விரும்பும் வேற்றுமையைக்கூடக் காணாதவர்கள். ஆரிய திராவிட வேற்றுமையையே தங்கள் பாரத தேசியமாக, சமதர்மமாக, பொதுவுடைமைச் சமுதாயமாக, அகிம்சா தர்மமாகக் கருதுபவர்கள். ஆண்டான் அடிமை ஒற்றுமையன்றி எதுவும் குறிக்கொள்ளாதவர்கள்.

ஆரிய திராவிட வேற்றுமை பாராட்டக்கூடாது என்ற சீரிய எண்ணம் கொண்டவர்களுள் முன்னணி முன் வரிசையில் இருந்தவர் காந்தியடிகள். முன் வரிசையில் இருப்பவர் பண்டித ஜவாஹர்லால் நேரு. ஆனால் இருவரும் இருவேறு வகைகளில் ஆண்டான் அடிமை ஒற்றுமையையே ஆரிய திராவிட ஒற்றுமையாகக் கண்டனர்.

இறுதிக்காலத் தொழுகைக் கூட்டமொன்றில் திராவிடநாட்டுக் கோரிக்கை பற்றிக் காந்தியடிகளார் குறிப்பிட நேர்ந்தது. 'தென்னாட்டிலுள்ள திராவிட மொழிகள் - தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் - மிகப் பழமையான பேரிலக்கியம் உடையவை என்று கேள்விப்படுகிறேன். ஆனால் சமஸ்கிருதச் சொல் தொகுதியைப் பேரளவில் கொண்டுதானே, சமஸ்கிருத இலக்கியத்தைப் பேரளவில் அணைத்துத்தானே அவை இத்தகையவளங் கண்டுள்ளன?' என்று அவர் கேட்டார்.

ஆரியர் சார்ந்தே ஆரிய திராவிட ஒற்றுமை காணமுடியும், காண வேண்டும்—காந்தியடிகள் அருளார்ந்த சமரசக் கற்பனைகூட இதற்குமேல் இன ஒற்றுமையை உருவாக்கிக் காண முடியவில்லை. சமஸ்கிருத எழுத்து முறை விலக்கி, சமஸ்கிருதச் சொற்கள் என்று ஐயுறப்படும் சொற்களைக்கூட விலக்கித் தனித்து இன்றும் இயங்கி, இனியும் இயங்க இருக்கும் தமிழ் மொழி பற்றிக் காந்தியடிகள் கேள்விப்படவில்லை என்பது தெளிவு. கேள்விப்பட்டால் என்ன கூறியிருப்பாரோ, அறியோம். அத்துடன் சமஸ்கிருதத்துக்கு இலக்கிய இலக்கணம் ஏற்படு முன்னரே, எழுத்து உருவாகும் முன்னரே, எழுத்து முறையும் இலக்கண இலக்கிய வளமும் சிறந்த மொழி தமிழ் என்பதும் காந்தியடிகள்வரை சென்று எட்டாத ஒரு செய்தி ஆகும். பாரத தேசியம்—பல தமிழ்த் தலைவர்களைக் கொண்ட பாரத தேசியம்— அத்தமிழ்த் தலைவர்கள் உழைப்பைமட்டும் ஏற்று, அவர்கள் பெயர் மறந்த தேசியம் செய்த, செய்து வரும் இருட்டடிப்பு இது!

காந்தியடிகளாரைவிட முனைப்பாக, காந்தியடிகளாரின் வாரிசாகிய பண்டித ஜவாஹர்லால் நேரு ஆரிய திராவிட வேற்றுமை உணர்ந்தவர். 'மீட்டும் கண்டு பிடிக்கப்பட்ட இந்தியா' என்ற அவர் சிறைக் காவியத்தில், ஆரியர் வருகைக்கு முன்பே நிலவியிருந்த, ஆரிய நாகரிகந் தூண்டிய சீர்சான்ற சிந்து வெளி நாகரிகம்பற்றி அவர் கிட்டத்தட்டக் கவிதை மொழியில் சிந்து பாடுகிறார். ஆரியர் வருகையால், இந்திய நாகரிகம் சிறிது தடைப்பட்டு, சிறிது தளர்வுற்றதன்றி, வேறெவ்வகையிலும் தொடர்ச்சியறாது, இன்றுவரை நிலவுகின்றது என்றும், இன்றைய இந்திய நாகரிகத்தின் வேர் முதல் அதுவே என்றும் அவர் விளக்கி மகிழ்கின்றார். அத்துடன் 'நாத்திகம்' என்ற பகுதியில், இன்றைய இருபதாம் நூற்றாண்டைய மேலை உலகுகூட வியப்பார்வத்துடன் காணத் தகும் உயர் முற்போக்குக் கோட்பாடுகளையுடைய உயர் பண்பாட்டியக்கம் இந்தியாவில் எங்கும் வேத காலத்துக்கு முன்பே பரவியிருந்தது; அது மூட நம்பிக்கையற்ற பகுத்தறிவொளி கண்டு சமுதாயச் சமத்துவம், சமயச் சார்பற்ற அறிவிலக்கியம் கண்டிருந்தது என்று பெருமைப்படுகிறார். ஆனால் இப்பெரு நாகரிகத்தின்—பெரும் பண்பாட்டின்—நிலைக்களமான திராவிட நாகரிகத்தை அவர் பெயர் சுட்டிக் குறிப்பிடக்கூட அவர் அறிவார்ந்த ஆரியக் குருதி இடம் தரவில்லை.

இந்தியா என்ற பெயர் 'இந்து' அதாவது நிலவை அடிப்படையாகக் கொண்டு பிறந்தது என்று அவர் தம் புதல்விக்கு வரையும் கடிதத்தில் குறிக்கிறார். விந்தியத்துக்கு வடக்கேயுள்ள பாரதம்,—சிந்து கங்கை சமவெளி - 'இந்து'போல, பிறைபோல வளைந்துகிடப்பதாலேயே அப்பெயர் என்றும் அவர் கூறத் தயங்கவில்லை. இராமாயணம் தென்னாட்டில் ஆரியர் பரவிய செய்தி குறிப்பதென்றும் அவர்

— 9ம் பக்கம் —

இந்த ஆண்டு

★

தென்றல் பொங்கல் மலர்

★

உயர்ந்த காகிதத்தில் கிரௌன்-பெரிய அளவில் தயாராகிறது!

★

விலை ?

குடிசைக்குள் கோட்டை!

பி. எஸ். மணியம், பி. ஏ.

அம்மா, அம்மா என்ற கதறல் அந்தக் கந்தல் குடிசையைக் கசக்கியது. சுழன்று சுழன்று வீசிய காற்றின் கொடுமைக்குத் தாளம் போட்டு ஆடித் தவித்துக்கொண்டிருந்தது திரிவிளக்கு. பட்டணத்து ரெளடிகளின் "மின்னல் வாழ்வு" போல வானம் மின்னலைக் காட்டியதை அவளால் கண்டுகொள்ள முடியவில்லை. பட்டாக்கத்தியின் விச்சாக வாழ்க்கையின் ஒவ்வொரு சம்பவமும் செல்லத்தின் நெஞ்சை அறுத்துக் கூறுபோட்டவாரிருந்தது

"உன் விழிகளை உருட்டி என் உள்ளத்தை அப்படியே வாரிச் சுருட்டுகிருயே"-என கண்ணனுல் வர்ணிக்கபபட்ட அந்தக் கண்கள் இப்போது எங்கே...கூர்மையான பார்வை கொண்டு கண்ணனின் இதயத்தைக் குத்திக் குடைந்து குதூகலத்தைக் கொட்டிய கொல்லும் விழிகளின் சக்தி ஏன் பறிபோனது - செக்குக்குள் சிக்கிய எள்ளாக செல்லத்தின் நினைவுகள் பிழியப்பட்டன.

அந்த ஏழைக்குடிசையுள் பொத்தல் நிறைந்த சுவர்களைப் பிடித்தவாறு இங்குமங்கும் நடந்துகொண்டிருந்தாள் செல்லம். வேதனையால் விம்மப்பட்ட மனத்திலே புதைக்க முடியாத புகைச்சல்! கண்ணே, ஏனம்மா அழுகிருய். நடப்பது நடந்துதானே திரும் - இப்படி வேதாந்த வார்த்தைகளைத் தேறுதலுக்காகச் சொன்னது தாய்மை உள்ளம். செல்லத்தின் அம்மா பூரணம் இருக்கிருளே, அவளோர் காய்ந்த சருகு. அனுபவத்தின் கொடுமை ரேகைகளால் குடையப்பட்ட அந்தக் கிழவி மறுபடியும் மறுபடியும் வாழ்க்கைத் தொடரின் மீது கண்ணீரைச் சிந்திளுள். மனம் நாலாபுறமும் நெறிக்கப்படும்போது வருத்தத்தால் மீறிடுகிறதே கண்ணீர்த்துளி, அதன் பூர்வாங்கத்திலே எத்தனை எத்தனை சோக வரலாறுகள் அமுங்கிக் கிடக்கின்றன. பூரணம் தன் வாழ்வைச் சுற்றிக் கண்ணீர் வளையம் போட்டிருந்தாள்.

உலகத்துப் பெண்களைப்போலவே பூரணமும் தனது வாழ்க்கையைத் தொடங்கிளுள். எல்லோரும் எதிர்பார்ப்பார்களே, அப்படி வாழ வேண்டும் இப்படி வாழவேண்டுமென்று, அதே போலவே அவளும் எதிர்பார்த்தாள். குடுமபப் பொறுப்பைத் தாங்கமுடியாத கோழைகளின் விசாலமற்ற கரங்களிலே சில பெண்களின் வாழ்வு சிக்கிவிடுகிறதல்லவா-அதுதான் பூரணத்தின் வாழ்க்கையிலும் நடந்துவிட்டது.

வறுமையின் வேதனை வருடலால் அந்தக் குடும்பம் கொடுமையில் சிக்கியது. ஒரு நாள்...பூரணத்தின் புருஷனைக் காணவில்லையென்ற பேச்சு ஊரெங்கும் பரவிக் கிடந்தது. அதே நேரத்தில் கணவன் கொடுத்துவிட்டுப் போன ஒரே சொத்தான குழந்தையைக் கிழிசல் பாயிலே போட்டு நெஞ்சைப் பிசைந்துகொண்டாள் அந்தப் பேதை.

மழலை அப்போது அவளுக்கு இனிக்கவில்லை. மனதில் மகிழ்ச்சி இருந்தாலல்லவா மழலை இனிக்கும்! அன்று சிந்தியது கண்ணீர்த் துளி. அது தொடர்ந்தது. வாழ்வின் அத்தனை நிகழ்ச்சிகளிலும் படர்ந்து பரிதாபத்தைக் கொடுத்தது. வாழ்க்கைச் சம்பவங்களைச் சமாளிக்க இயலாது தவிக்கும் ஏழைப் பெண்ணின் ஒரே ஊன்று கோல் கணவன்தானே! அதுவும் பறிபோய் விட்ட பின்பு. அனலிலே தூக்கியெறியப்பட்ட புழுவாக அலறித் துடித்தாள் பூரணம்.

நாற்று நடுதல், களை பிடுங்குதல், கதிர் அறுத்தல் போன்ற வயல் வேலைகளிலே ஈடுபட்டு வயிற்றைக் கழுவினுள் பூரணம். தனித்திருக்கும் ஒரு அழகான பெண் தடங்கலின்றி வாழ்ந்தாளென்பதற்குச் சரித்திரமே கிடையாதே. தோட்டத்து முதலாளி தனியான சலுகைகள் கொடுக்கத் துவங்கியபோதே அவள் சந்தேகப்பட்டாள். நெளிந்து வளைந்து முதலாளி உருவிலே வந்த சாரைப்பாம்பு அவள் நெஞ்சைச் சுற்றிப் பின்னியது. தவறிய பூரணம் அப்போதும் கண்ணீர் வடித்தாள். நிழல் தந்த பந்தல் அவளது தலையையே அமுக்கியது. முதலாளிகளின் பாசம் குறைந்த காலச் சரக்கென்பதை சீக்கிரமே புரிந்து கொண்டாள்.

காலம் ஓடிக்கொண்டே இருந்தது. அதே சமயம் பூரணத்தின் ஒரே மகள் செல்லம் மலர்ந்து கொண்டே இருந்தாள். உழைத்து உழைத்து உடலைக் குச்சியாக்கிக் கொண்ட பூரணத்தின் ஒரே ஆசை தனது செல்ல மகளின் வருங்காலத்தைச் செழிக்க வைக்க வேண்டுமென்பதே. தன் சொந்த வாழ்வின் கண்ணீர்த் திட்டுகளைச் செல்லத்தின் கண்களில் படாதவாறு திரையிட்டே அவள் வளர்த்து வந்தாள்.

உலகத்தின் எந்தக் கொடுமைக்குமே பயப்படாத உரத்தை பூரணத்தின் அனுபவம் அவளிடம் திணித்தது. ஆனுல் பச்சைக் குழந்தைகளைப் பாய்ந்து தூக்குமே பருந்துக் கூட்டம், அதற்குத்தான் அவள் அதிகமாக பயப்பட்டாள். அதிலும் தனது செல்லம் வளர வளர அந்த பயமும் வளர்ந்தது.

இப்படியிருக்கும் போதுதான் அந்த இடி நிகழ்ச்சியும் எதிர்பாராத விதமாக நிகழ்ந்துவிட்டது. மாலைக் கரங்களால் தாலாட்டப்படும் தென்றலில் ஏதோவொரு இனிமையான சொல்லோசையைக் கற்பனை செய்தவாறு நடந்துகொண்டிருந்தாள் செல்லம். இருட்டு, உலகத்தை இறுக்க ஆரம்பித்தது. வேகமாக நடந்த அவளின் சேலைத்தலைப்பு எங்கேயோ சிக்கியது. திடுக்கிட்டுத் திரும்பிய செல்லத்தின் எதிரே முரட்டு இருதயத்தைத் தூக்கிக் கொண்டு நின்ருர் முதலாளி. மங்கிய வெளிச்சத்திலும்கூட அந்த வெறிக்கண்கள் கொளுந்துவிட்டன. எத்தனையோ முறை முதலாளிக் கழுகின் மூர்க்கப்பாய்ச்சலுக்குத் தப்பியோடியிருக்கிருள் செல்லம். அன்றும் ஒடிந்து விழும் இதயத்தைத் தூக்கிக்கொண்டு ஓடினுள் அவள்.

வெறிகொண்ட வல்லூரின் வேகமான துரத்தலுக்குத் தப்பித்து ஓடினுள். ஊரிலே, நாட்டிலே பெரிய மனிதனென்ற பெயரிலே உலவிவரும் அந்த முதலாளி-எவ்வளவு சின்னத்தனமான வேலைக்குத் தன்னைத் தயார்படுத்துகிருர். சாதாரண சமயங்களில் நடப்பதற்குக்கூடச் சங்கடப்படும் அவர் அப்போது மட்டும் ஓட்டப்பந்தயம் நடத்துகிருரே - செல்லத்தின் கால்கள் ஓடும்போதே, உலகத்தை ஓட்டிச்செல்லும் பெரியவர்களின் பின்னணிகளை அவள் ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

வெளிச்சத்தை மறைத்துவிட்ட இருட்டு - விருப்பத்தைப் பலவந்தமாகப் பறிக்க நினைக்கும் முதலாளியின் மிரட்டல் - இவைகளுக்கூடே ஓடிக்கொண்டிருந்த செல்லம் எங்கோ இடறி வீழ்ந்தாள். அது பாதாளக்கிணறு. இரக்கமென்ற பசையை இழந்துவிட்ட இருதயம் போன்று வரண்டுகிடந்த கிணற்றிலே விழுந்த செல்லத்தின் கண்களிலே பாறையின் பலமான வெட்டு. தன் அருமைக் கண்ணனுக்காகக் காப்பாற்றி வைத்த கற்பை செல்லம் பாதுகாத்துக் கொண்டாள். ஆனுல் ஒளி சிந்தும் அந்தக் கண்கள் குருடாகிவிட்டன.

யாரின் நல்வாழ்வுக்காக பூரணம் தன் உயிரை உடலிலே தொடுக்கி வைத்துக் கொண்டிருந்தாளோ அவள் இப்போது குருடி. ரோஜாப் பூவின் ஒரு பகுதி இதழ்கள் பிய்த்தெறியப்பட்ட பின்பு அது எப்படி அழகு மிக்கதாக விளங்கமுடியும்! பூரணத்தின் வெம்பிய மனத்தைக் குலுக்கிய இந்த நிகழ்ச்சியும் கண்ணீரைக் கொட்ட வைத்தது. அதுவரை, எங்கே தன் செல்லம் கண்ணீரைக்கண்டுகொள்வாளோ என மறைந்திருந்து அழுவாள். ஆனுல் அன்று முதல் சுதந்திரமாக அழுதாள். தனதுகண்ணீரைத்துடைக்க, அதனுல், துயரம் கொள்ள, இருந்த ஒரே உருவம்தான் குருடியாகிக் கிடக்கிறதே! குடம் குடமாகக் கண்ணீரைக் கொட்டிக் கொட்டி அழுதாள் பூரணம். எந்த ஏகாதிபத்தியத்தாலும் தடை போட முடியாதது ஏழையின் அழுகைதானே! வாழ்க்கையில் எங்கெங்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் வளைத்து வருத்திக் கொட்டும் சில தேள் கொடுக்குகள் சீமான் போர்வையிலே உலவுகின்றனவே-சிதைந்து கிடந்த பூரணம் சீறினுள். அவளின் சீற்றம் கரையான் படிந்த சுவற்றுக் குடிசையின் வெளிப்புறத்தைக் கூட எட்ட முடியவில்லை!

புன்னகை சிந்தும் பசுமை வயல் வெளிகள்-பூத்துக் குலுங்கும்தோட்டத்துப் பூக்கள்-வானத்தில்படர்ந்து கிடந்து விளையாட்டுக் காட்டும் நட்சத்திரக் கூட்டங்கள் — எதையுமே காணமுடியாத நிலை கண்டு கலங்கினுள் செல்லம். ஆனுலும் ஒவ்வொரு சமயம் அந்த உரித்து வைத்த ஆரஞ்சுச்சுளை உதடுகளைக் கிழித்துக்கொண்டு சிறு சிரிப்பு வெளிப்பட்டவாரிருந்தது. அப்போதெல்லாம் அவள் சிந்தனைக் கொந்தளிப்பிலே சிக்கினுள். தானுகவே பாடினுள், தானுகவே பேசினுள், தானுகவே சிரித்தாள். இந்த அடையாளங்களெல்லாம் ஒரு பருவப் பெண்ணிடம் தெரிந்தால் அவள் காதல் வியாதியின் ஆட்சியால் கவரப்பட்டிருக்கிருளென்பது தானே அர்த்தம்!

பார்வையிழந்த செல்லத்தின் இருதயம் மட்டும் அந்த ஒரு உருவத்தை விதம் விதமாக ஆட்டிவிட்டுச் சிரித்தது. காதல் ஒரு பலமான புயல் காற்று. எவ்வளவுதான் தடுப்புகள் ஏற்படுத்தி வைத்தாலும் பருவ உள்ளத்தில் பாய்ந்து புகுந்துவிடுகிறதல்லவா. அந்தக் காதல், கண்ணனின் உருவத்தில் செல்லத்தின் இருதயத்திலே புகுந்து கொண்டது. அவளும் அதை விரட்ட நினைக்கவில்லை. சின்னஞ்சிறு பிள்ளை தன் பிஞ்சுக்கரங்களால் சில சமயம் பலமாக அடித்தாலும் அது பெற்ருேருக்கு ஒருவித சுவை கொடுக்கிறதல்லவா. அதுபோலவே காதலென்ற மெல்லிய உருவம் மனத்திலே புகுந்து எப்படிக் குடைந்தாலும் அதிலே இனிமை தோன்றுகிறது! கண்ணனை நினைத்த போதெல்லாம் செல்லத்தின் கவிழ்ந்த கண்கள் நிமிர்ந்து சிரித்தன.

கண்ணன் எங்கோ முன்னூறு மைல்களுக்கப்பால் கல்லூரி மாணவனுக இருந்தான் அவ்வளவு அதிகமான தூரத்தையும் காதலி தனது ஒரே நினைப்பால் எவ்வளவு நெருக்கத்துக்குக்

— 10ம் பக்கம் —

நன்னூல் நன்னூலா?

பாவாணர் கருத்துரையை மறுத்தவர்க்கு மறுப்பு இது. 'தென்றல்'லுக்கென பாவாணரே எழுதியனுப்பியது.

சென்ற வாரத் 'தென்றல் இதழில் 'நன்னூல் நன்னூலே!' என்றொரு கட்டுரை, என் 'நன்னூல் நன்னூலா?' என்னும் கட்டுரைக்கு மறுப்பாக வெளிவந்ததைக் கண்டேன். அம்மறுப்பின் போலித் தன்மை தமிழாராய்ச்சியாளர்க்குத் தெளிவாகத் தெரிவது தேற்றமாயினும், மாணவருலகின் மயக்கறுத்தற்பொருட்டு, இம்மறுப்பறுப்பை விடுகின்றேன்.

'நன்னூல் நன்னூலே!' என்னும் கட்டுரையாசிரியர் சென்னைச் சௌக்கார்பேட்டை ஜெயின் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்வான் எஸ். பி கெம்பீரநைனர் என்னும் செய்தியொன்றே அவர் பவணந்தி என்னும் சமண முனிவர் இயற்றிய நன்னூற் குறையை மறைத்தற் காரணத்தை அறிஞர்க்குணர்த்தப் போதுமானதாம். மதப்பற்று மதப்பற்றன்றோ!

இனி, மறுப்பாசிரியர் மறுப்புக்களையெல்லாம் ஒவ்வொன்றாய் எடுத்தறுப்பாம்.

மறுப்பு: "நன்னூல்நன்னூலா?" என்று கேட்டிருப்பது, மரத்தைக் கண்ட ஒருவன், இந்த மரம்மரமா? என்று கேட்பதுபோல் வினவில் தவறுபட்டு வினா வழுவாய் அமைந்துள்ளது.

அறுப்பு: மரத்தை மரமென்று கண்ட ஒருவனுக்கு, இது நன் மரமா என்று ஐயம் எழுமேயன்றி மரமா என்று ஐயம் எழாது. அதுபோல், ஒரு நூலைக் கண்டவனுக்கு இது நன்னூலா என்று ஐயம் எழுமேயன்றி நூலா என்று ஐயம் எழாது. பவணந்தி முனிவர் தம் நூலுக்கு நன்னூல் என்று பெயரிட்ட அளவிலேயே அது நன்னூலாகிவிடாது. பொருளுக்கும் பெயருக்கும் பொருத்தம் இருப்பினும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். இரு கண்ணுமில்லானுக்குத் தாமரைக் கண்ணன் என்றும், இரு காலுமற்றவனுக்குத் தாண்டவ வரையன் என்றும், பெயரிடப்பட்டிருக்கலாம். குற்றம் நிறைந்த வேறு சில நூல்கள்கூட நன்னூல் என்று பெயர் பெறலாம்.

ஒரு கனியை உண்டபட்டில் அது நன்றென்று ஒரு பொது மகன் கொள்ளுதல் தகாது. அதனை ஆய்ந்து அதன் உண்மைத் தன்மையைக் காண்பவன் மருத்துவனே. அதுபோல், ஒரு நூலையும் ஒரு மாணவன் கற்ற அளவில் அது நன்றென்று கொள்ள முடியாது. ஆராய்ச்சியாளனே அதன் உண்மைத் தன்மையைக் காண இயலும்.

நன்னூல் என்ற பெயரளவில் அதை நன்னூலென்று தாம் மயங்கியதுமன்றி, தம்மைப்போற் பிறரையுங் கருதி அம்மயக்கத்தைப் பிறர் மீதும் ஏற்றிக்கொள்கின்றார், நம் மறுப்பாசிரியர். "நன்னூல் நன்னூலா?" என்னும் வினாவை, நல்லெண்ணெய் நல்லெண்ணெயா? நன்மாறன் நன்மாறனா? நல்ல பாம்பு நல்ல பாம்பா? என்றித் தகையவற்றுள் ஒன்றற்கு ஒப்பிடலாமேயன்றி, 'இந்த மரம் மரமா?' என்னும் வினாவிற்கு ஒப்பிடலாகாது. இதை உவமையிலக்கணம் செவ்வையாய் அறிந்தாரே உணர்வர்.

மேலும் "வினாவில் தவறுபட்டு வினா வழுவாயமைந்துள்ளது." என்னும் சொற்றொடர், கூறியது கூறலாம். 'வினாவில் தவறுபட்டுள்ளது' 'வினா வழுவாயமைந்துள்ளது' என்னும் இவ்விரண்டில் ஒன்றே அமையும்.

ம. 2. "இன்னின்ன எழுத்துக்கள் இன்னின்ன இடத்தில் குறுகி ஒலிக்கும் என மாத்திரை குறிக்கும் இடத்தும், புணரியலிலும் கூறினாற் போதுமானதாம்." எனக் கூறி, முன்பு தாம் மறுத்த அச்சார்பு எழுத்துக்களின் வகைகளை ஏற்றுக் கொள்ள உடன்படுகிறது."

அ. சில எழுத்துக்கள் சிலவிடத்திற் குறுகி யொலித்தமட்டில் சார்பெழுத்துக்களாகிவிடா. எழுத்துக்கள் குறுகி யொலித்தல் மட்டுமன்றி நீண்டும் ஒலிக்கும்.

> **"ஆவியு மொற்றும்**
> **அளவிறந் திசைத்தலும்**
> **மேவு மிசைவிளி**
> **பண்டமாற் றாதியின்."**

என்று நன்னூலாரே நன்றாய் (தெளிவாய்)க் கூறியுள்ளார். ஆகவே, குறுகியும் நீண்டும் ஒலிக்குமிடமெல்லாம் சார்பெழுத்தியல்பைப் பிறபுவுணர்தலாம். குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய மூன்றும், குறுகி யொலித்தல் மட்டுமன்றித் தத்தம் முதலினின்று திரிந்தொலித்தாலும்சார்பெழுத்துக்களாயின என்றறிதல் வேண்டும்.

ம. 3. 'சன்மதி' 'யசோமதி' யென்ற பெயர்களும், 'பவணந்தி' 'தரும நந்தி' என்ற பெயர்களும் பண்டு தொட்டு இன்று காறும், தமிழ்நாட்டு ஜைனர்களுக்கேயிட்டு வழங்கப்படும் பெயர்களாக அமைந்துள்ளன......... இப்படியிருக்க யாதொரு ஆதாரமுமின்றி நன்னூலாரை ஆரிய அந்தணர் என்றால், அதை ஆராய்ச்சியுலகம் அடியோடு ஏற்காது."

அ. சன்மதி, யசோமதி, பவணந்தி, தருமநந்தி என்பன தமிழ்ப் பெயர்களல்லவென்பதும், சமணம் வட நாட்டினின்று வந்த அயல் மதம் என்பதும், யாவரும் அறிவர். பவணந்தியார் ஒருகால் பிறப்பளவில் திரவிடராயிருந்திருப்பினும், கருத்தளவில் மாறுபட்டவர் என்பதை எவரும் மறுக்கவொண்ணாது. ஒருவரை ஓர் இனத்தோடு சார்புபடுத்துவது, சிறப்பாக அவர் மனப்பான்மைபற்றியே யன்றிப் பிறப்புப்பற்றியன்று.

ம. 4. "நம் தமிழ்நாடு தொல்காப்பியர் காலத்திற்குப் பின்பும் நன்னூலார் காலத்திற்கு முன்பும் ஆகிய இடைப்பட்ட காலத்தில் தொடர்பைப் பெரிதும் மேற்கொண்டு, அவர் தம் நடையுடை பாவனைகளில் பெரிதும் ஈடுபட்டு இருந்ததோடன்றி, அவர் தம் வடமொழியையும் தமிழில் கலந்து வழங்குதலை உயர்ந்த நாகரிகமாகக் கருதி வந்தது.

அ. நம் மறுப்பாசிரியர் தமிழ் நாகரிகத்தையும் தமிழ் வரலாற்றையும் செவ்வையாய் அறியாமையை அவர் மறுப்பு அறிவிக்கின்றது. இதற்கு விடை விளக்கம் ஒரு பெருநூலாய் விரியும். வடமொழியாளர் தென்னாட்டிற்கு வந்தபின்பு, தமிழ்ப் புலவருள், தமிழன்பரும் (காட்டிக் கொடுக்கும்) தமிழ்ப் பகைவரும், (கவலையற்ற) பொது மலருமாக மூவேறு சாரார் தோன்றினர். இடைக் காலத்தில் தமிழன்பர் கை முற்றும் தாழ்ந்துவிட்டதினால், வடவர் வாழ்க்கை முறையும் வடமொழியும் போற்றப்படத் தொடங்கினவேயன்றி வேறன்று

இந்திய நாகரிகப் பண்பாட்டின் அடிப்படை தமிழரதேயென்பதும், தமிழ் தெற்கில் மூழ்கிப் போன குமரி நாட்டில் தோன்றி வடக்கே சென்று திரவிடமாய்த் திரிந்ததென்பதும், திரவிடமே ஆரியத்திற்கடிப்படையென்பதும், தமிழ் வடமொழியால் தளர்ந்ததேயன்றி வளர்ந்ததன்று என்பதும், கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நூல்கள் ஒளிக்கப்பட்டும் ஒழிக்கப்பட்டும் வந்தன என்பதும், உலகம் அறியும். காலம் அடுத்து வருகின்றது என்பதை நம் மறுப்பாசிரியர்க்கு உணர்த்த விரும்புகின்றேன்.

ம. 5. "சியகங்கன் அரும்பொருள் ஐந்தையும் தருகவெனக் கேட்டதாகவும், பன்னருஞ் சிறப்பிற் பாடித் தந்ததாகவும் பாயிரஞ் செப்புகின்றது. ஆதலின், ஐந்தும் அமைந்ததாய் அந்நன்னூல் நிறைநூலே ஆம் என்க."

அ. சியகங்கன் ஐந்திலக்கணமும் இயற்றித் தருமாறு பவணந்தி முனிவரைக் கேட்டிருக்கலாம். அவரும் இசைந்திருக்கலாம். ஆயின், அந்நோக்கம் நிறைவேறியதென்பதைக் காட்டற்கு யாதொரு சான்றுமில்லை.

பாயிரம், நூலியற்றதைக் குறிக்குமிடத்து, "முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்" என்றுமட்டும் கூறுகின்றதேயன்றி, ஐந்திலக்கணமும் வகுத்தனன் என்று ஐடமறக் கூறவேயில்லை.

பெயரியலில் (10)

> **"பல்வகைத் தாதுவி**
> **னுயிர்க்குடல் போற்பல**
> **சொல்லாற் பொருட்கிட**
> **னாகவுணர் வினின்**
> **வல்லோ ரணிபெறச்**
> **செய்வன செய்யுள்."**

என்று செய்யுளிலக்கணம் கூறியிருப்பது, சொல்லின் பொதுவிலக்கணம் கூறிய நூற்பாவில் உள்ள "வழக்கொடு செய்யுளின்" என்னும் பாகுபாட்டின் ஒரு பகுதியை விளக்க எழுந்ததாயினும், தொல்காப்பியத்தில் அங்ஙனம் கூறப்படாமையை நோக்கும்போது, நன்னூலில் செய்யுளதிகாரம் என ஒன்று என்றேனும் அமைந்திருந்ததாகத் தெரிகின்றிலது.

மேலும், சமணம் சம்பந்தர் காலத்திற்குப் பின் தமிழ்நாட்டில் தலை தாழ்த்துப் போயினும், ஓரளவு இன்றுவரை இடையறாது தொடர்ந்து வருவதால், ஒரு சமணர் வீட்டிலும் ஐந்ததிகார நன்னூலில்லாமையும், ஏனை மூவதிகாரங்களுள் ஒன்றேனும் ஓரிடத்துமின்மையும், அவை ஆசிரியரால் இயற்றப்பட்டில என்பதே யுணர்த்தற் பால.

ம. 6. தமிழ்ப் புலவராம் குடிகள்...

> **"முன்னோர் ஒழியப்**
> **பின்னோர் பலரிலும்**
> **நன்னூலார் தமக்கு**
> **எந்நூலாரும் இணையோ."**

எனப் புகழ்வராயினர்.

அ. இது, குபக்கொண்டான் மாரும் சுவாமிநாத தேசிகன்மாரும் வையாபுரிகளும் ஆகிய கோடரிக் காம்புகளின் கூற்றேயெனக் கூறிவிடுக்க.

ம. 7. "ஒன்றொழி முந்நூற்று எழுபான் **என்ப.**" என்று விரிவைக் கண்டவர்களையும் காட்டுகின்றார்.

அ. 'என்ப' என்பது அசைச் சொல்லாயும் வரும் என்பதை மறுப்பாசிரியர் அறியார் போலும்! தொல்காப்பியம் — சொல்லதிகாரம் 293-ஆம் நூற்பா வுரையைக் காண்க.

மேலும், "ஒன்றொழி முந்நூற்றெழுபான் என விரிக்கும் முன்னை நூலொன்றும் இதுபோதில்லை.

ம. 8. "உயிரெழுத்தாயினுஞ் சரி, மெய்யெழுத்தாயினுஞ் சரி எல்லா எழுத்துக்களையும் மனத்தால் நினைக்கும்போது மாத்திரம் வாய் திறவாமல் நினைக்கலாமேயொழிய, எதிராளிக்குத் தாம் கூறிக் காட்டுங் காலத்து வாய் திறந்தே கூற வேண்டுதலின் மெய்த்தன்மையையுடைய ஆய்தம் அங்கடத்தலில் தோன்றுது எனக் கொள்ளுதல் எட்படிப் பொருந்தும்?"

அ. மெய்யெழுத்துக்களையும் கூறிக் காட்டுங் காலத்து அங்காந்தே கூற வேண்டியிருத்தலின், ஆய்தத்திற்குமட்டும் ஏன் 'அங்கா முயற்சி'யை விதந்து கூற வேண்டும்?

மேலும், பவணந்தி முனிவரே,

> **அவற்றுள் முயற்சியுள் 'அ ஆ**
> **அங்காப்புடைய"** (76)

என முதலிருயிர்கட்கும்

> **"இ ஈ எ ஏ ஐயங் காப்போ**
> **டண்பல் முதனா விளிம்புற**
> **வருமே."** (77)

என ஏனைச் சிலவுயிர்கட்குமாக, அங்கா முயற்சியை இதழகல் உயிர்கட்குமட்டும் ஏன் வரையறுக்க வேண்டும்?

ம. 9. "தும்மல் ஒலிபோன்று ஆய்த ஒலி தலையில் பிறப்பதை யெப்படி மறுத்தல் இயலும் எனக் கேட்க நேரிடுகின்றது."

அ. தும்மல் ஒலிபோன்று எங்ஙனம் ஆய்த வொலி தலையில்

— 11ம் பக்கம் —

பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர், எம். ஏ.
அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திராவிடமொழிநூல் துறைத்தலைவர்.

அத்திப் பழம்

மா.கி.தசரதன் எம்.ஏ.

- 2 -

கூவம் ஆற்றின் கரை ஓரமாக இருந்த மாணவர் விடுதியில் 79ம் எண்ணுள்ள அறையில் இரவு இரண்டு மணிக்கு ஒரு இளைஞன் உறக்கம் கெட்டு படுக்கையில் இப்படியும் அப்படியுமாகப் புரண்டுகொண்டிருந்தான். ஆழ்ந்த துயிலின் அணைப்பில் கிடந்த அவனை காற்றுடன் கலந்து வீசிய மழைத் துளிகள், சற்று முன்பு தான் திறந்திருந்த சன்னல் வழியாகப் புகுந்து எழுப்பிவிட்டன. போர்வையை எடுத்து எறிந்து எழுந்து போய் சன்னல் கதவுகளை மூடிக்கொண்டு வந்து படுத்தபின் உறக்கம் கலைந்துவிட்டது. எவ்வளவோ முறை கண்ணை மூடி மூடி துயில்கொள்ள முயன்றான்; ஆனால் தூக்கம் அவனை மறுபடியும் வந்துசேரவில்லை.

"நாளை இந்நேரம், நாளை இந்நேரம்" என்றே அவன் மனம் மீண்டும் மீண்டும் எண்ணிக்கொண்டிருந்தது. இன்றைக்கு இல்லாத புதுமை நாளைக்கு என்ன வர இருக்கின்றது? திருமணம் ஆனவர்களுக்கு மனைவியுடன் தனிமையில் கழிக்க இருக்கும் இனிய நாள் இன்பமான எண்ணங்களை கிளர்ந்தெழச் செய்து 'இன்னும் என்ன இருக்குமோ?' என்ற வியப்பை ஊட்டி 'நாளை எப்போது வரும்?' என்று ஏக்கமுறச் செய்யும். ஆனால் ஞானசம்பந்தனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. ஆனாலும் "நாளை இந்நேரம்." என்று அவன் மனம் எண்ணி மகிழத் தவறவில்லை. அன்று வியாழக்கிழமை. நாளை வெள்ளி. சனி ஞாயிறு இரு நாட்களுக்கும் விடுமுறை உண்டு. அதனால் வெள்ளிக்கிழமை மாலையே ஊருக்குப் போய்விட வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தான். ஆம்! ஞானசம்பந்தன் கல்லூரிக்கு வந்து சேர்ந்த பின்னர் முதன்முறையாகத் தன்னுடைய ஊருக்கு நாளை போகின்றான்! முழுவதாக ஐந்து நாட்கள்கூட அவன் இன்னும் கல்லூரியில் வகுப்பறைக்குள் உட்காரவில்லை. என்றாலும் 'முதன் முதலில் கல்லூரி மாணவனாக ஊருக்குள் போகின்றோம்' என்ற உணர்ச்சியே அவனை எங்கோ அழைத்துச் சென்றது. இத்தனைக்கும் மாத்தூர் எங்கோ நெடுந்தொலைவில் இரவு புறப்பட்டு மறுநாள் மாலை போய்ச் சேரும் மூலையில், முடுக்கில், சாலை இல்லாத நடுக்காட்டில் இல்லை. மூன்று மணி நேர பஸ் பயணம். அதுபோதும் மாத்தூர் மண்ணை மிதித்துவிட. ஆனாலும் எங்கோ கடலுக்கு அப்பால், கண்ணுக்குப் புலனாகாத இடத்துக்குப் போய் மீண்டு வருவதைப் போன்ற உணர்ச்சி அவன் உள்ளத்தில் நிரம்பி இருந்தது.

பட்டணத்தைவிட மாத்தூரில் என்றும் புதுமையும் இல்லை; கவர்ச்சியும் இல்லை. பசி எடுப்பதுகூட தெரியாமல் பார்த்த இடங்களையே மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டே பொழுதையும் பொருளையும் கழிப்பதற்குச்

துறவுக்குக் காரணம் ?

சென்னையில் அளவற்ற வழிகள் இருக்கின்றன. இன்னும் ஞானசம்பந்தன் பட்டணத்தைச் சரியாகப் பார்க்கவும் இல்லை. என்றாலும் கூட்டைத் திறந்ததும் அடைபட்டுப் புழுங்கிக்கிடந்த பச்சைக்கிளி சிறகடித்துப் பறந்து ஓடிவிடத் துடிப்பதுபோல் சனி ஞாயிறு விடுமுறையில் ஓடிப் போய் அந்த மாத்தூர் மண்ணை மிதித்து விட வேண்டும் என்று துடித்தான்.

வளம் இழந்த வயல்களையும், வறுமை நிலவும் இல்லங்களையும், வாட்டம் நிறைந்த,—ஆனால் பழகிய முகங்களையும் காண வேண்டும் என்ற ஆவல் அவனுடைய முகத்தில் நிரம்பி இருந்தது. தெருக்கோடியில் காலா காலமாக இருந்த குளத்தங்கரை அரசமரத்தின் அடியில் கருங்கல் மேடையில் போய் உட்கார்ந்துகொண்டு நண்பன் எழிலன் வரும் வழியையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பினான்.

எழிலனைப் பற்றி எண்ணியதும் அவன் சிந்தனை வேறு துறையில் திரும்பிவிட்டது. ஞானசம்பந்தனும் எழிலனும் நினைவு தெரிந்த நாள் முதல் ஒன்றாகவே எதிலும் இருந்தவர்கள். ஒருவர்க்கொருவர் பலமுறை அடித்துக்கொண்டுகூட சண்டை போட்டிருக்கின்றனர். ஆனால் ஒருவரைப் பிரிந்து இருப்பது அவர்களால் இதுவரை நினைத்துக்கூட பார்க்கமுடியாததாக இருந்தது. கல்லூரிப் படிப்பு இதோ ஒருவாரம் அவர்களைப் பிரித்து வைத்துவிட்டதே என்று எண்ணியபோது 'உண்மைதானா இது' என்று ஞானசம்பந்தன் வியப்பில் ஆழ்ந்து தன்னை மறந்தான்.

'நாளை மாலை போனதும் அவனைப் பார்க்க முடிகின்றதோ என்னவோ. ஒருவேளை நாளை பார்க்கவில்லை எனினும், மறுநாள் காலை அவனே அரசமரத்தடியில் வந்து 'கொட்டு கொட்டு' என்று காத்திருப்பான்!' என்று ஞானசம்பந்தனின் மனம் தன் நண்பனை நாடியது. காத்திருப்பான் என்பது உண்மைதான். ஆனால் அந்த எழிலன் காத்திருப்பதோடு மட்டுமா? நண்பனைக் கண்டவுடன் கல்லூரியில் சேர்ந்துவிட்டாயா? வகுப்புக்கு ஒழுங்காகப் போகின்றாயா? எல்லாம் புரிகின்றதா, இல்லை வால் மட்டும் நுழையவில்லையா? என்று வினாமேல் வினாவாகத் தொடுத்துக்கொண்டே போவான். எதையும் துருவித் துருவிக் கேட்கும் இயல்பு கொண்டவன் எழிலன். துளைத்துத் துளைத்துக் கேட்பவன் என்று மற்றவர்கள் சொல்வது உண்டு.

அப்படிப்பட்ட இயல்பு கொண்டவன் ஒருவாரம் புதிய துறையில் நுழைந்து வரும் நண்பனை வாளா விட்டுவிடுவானா? என்னென்ன கேட்பான்? எதைப் பற்றியெல்லாம் வினவுவான்? அவனுக்கு என்னவெல்லாம் சொல்லுவது? என்று ஞானசம்பந்தனின் மனம் கடந்த ஐந்து நாட்களில் தான் வாழ்ந்த புதிய வாழ்க்கையைப் பற்றி எண்ணிப் பார்க்கத் தொடங்கியது.

நடந்துபோனவற்றை, கடந்து போனவற்றைப் பின்னால் ஓர் நாள் 'ஆர அமர' இருந்து ஆராய்வது ஒரு புதிய அனுபவத்தையும் இன்பத்தையும் உண்டாக்குகின்றது; உண்மைதான். அன்றாடம் செய்தித்தாள்களைப் படிக்கின்றோம். அப்போது அதில் வரும் பரபரப்பான செய்திகள் கூட சில வேளைகளில் நமக்குச் 'சப்'பென்று போய்விடுகின்றன. எங்காவது ஒரு இடத்தில் போன ஆண்டு அதற்கு முன் ஆண்டு வெளிவந்த செய்தித்தாள்களை எல்லாம் தொகுத்துத் தைத்து வைத்திருந்து, அவற்றைப் புரட்டிப் பார்க்கின்றபோது நாம் கணத்துக்குக் கணம் வியப்படைகின்றோம். அதிலே வந்திருக்கும் விளம்பரங்களைக் கண்டு வியக்கின்றோம்; செய்திகளைக் கண்டு திகைக்கின்றோம்; படங்களைக் கண்டு புன்னகை பூக்கின்றோம்.

அன்று காலை வெளிவந்த செய்தித்தாளில் புதுமை கண்டதைவிட அந்தப் பழைய தாளைக் கண்டு மகிழுகின்றோம். அதைப் போலவே சாதாரணமாகக் கழிந்தது என்று எண்ணிக்கொண்டிருந்த அந்த நான்கைந்து நாட்களின் நிகழ்ச்சிகளை ஒருமுறை நினைவு கூர்ந்தபோது ஞானசம்பந்தன் திகைப்பில் ஆழ்ந்து போனான்.

“இதுவரையில் நன்றாகப் படித்து வந்தாய். இனியும் அப்படித்தான் இருக்கவேண்டும். நான் என்ன உனக்குச் சொல்ல இருக்கின்றது...நான் வரட்டுமா?” என்று அவனுடைய தந்தை குழைந்து குழைந்து சொற்களையும் உணர்ச்சியையும் வெளியிட்டுச் சென்றதும், ‘ஆ’ பிரிவு எங்கே இருக்கிறது என்று தன்மேல் உராய்ந்துகொண்டு சென்ற ஒரு மாணவனைப் பார்த்துக் கேட்டான். ‘நானும் அங்கே தான் போகின்றேன். போகலாம்’ என்று அந்த மாணவன் ‘தூய’ மொழியில் சொல்லிய வண்ணம் போய்க்கொண்டிருந்தான். ஞானசம்பந்தன் போவதற்குள் வகுப்பில் முன்வரிசை இடங்கள் எல்லாம் நிரம்பி பின்னால் சில இடங்கள் மட்டுமே இருந்தன. மாடி ஏறுவதுபோல் அந்தப் படிகளில் ஏறிப் பின் வரிசையில் ஒரு மூலையில் உட்கார்ந்தான். வகுப்பில் எல்லோரும் புதியவர்கள். சென்ற ஆண்டு ‘தவறியவர்கள்’ இரண்டொருவர் அங்கே இருந்தனர் என்பதனை அவர்களின் தோற்றமே காட்டியது. மற்றவர்கள் எல்லோரும் ‘எந்த ஆசிரியர் வருவாரோ என்ன கேட்பாரோ’ என்று மிரண்ட வகையில் ஆவலையும் அச்சத்தையும்கலந்து கொண்ட தோற்றத்தோடு இருக்க அந்த இரண்டொருவர் மட்டும் “தமிழாசிரியர் அ. வருவார் அடுத்து...” என்று பக்கத்தில்இருந்தவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தனர். ஞானசம்பந்தன் காதிலும் அது விழுந்தது. முதல் வகுப்பு தமிழ் என்றதும் மகிழ்ந்தான். ‘யார் அந்த அ?’ என்று எண்ணிக்கொண்டிருக்கும்போதே வெள்ளைக்காரரைப் போல உடையும் நடையும் அமைந்த ஒருவர் வகுப்பிற்குள் வந்தார். தமிழாசிரியர் வரவில்லை. பதிலாக ஆங்கில ஆசிரியர் வந்திருக்கின்றார் என்றுதான் ஞானசம்பந்தன் முதலில் நினைத்தான். ஆனால் அவரோ “அன்புள்ள நண்பர்களே” என்று தொடங்கினார். வகுப்பில் ஆழ்ந்த அமைதி நிலவியது.

“இன்றைய தினம் நீங்களும் நானும் ஆசிரியர் - மாணாக்கராக முதன் முதலில் காணுகின்றோம்; கூடி இருக்கின்றோம். இனிய தமிழை, அதன் எழிலார் இலக்கியத்தின் துணுக்குகளை எழுச்சியும் ஊக்கமும் மிக்க உங்களைப் போன்ற இளைஞர்களுக்கு எடுத்து இயம்பும் நல்ல வாய்ப்பு இந்த ஆண்டு முழுவதும் எனக்கு வாய்த்திருக்கின்றது. இந்த நல்ல பணியில் ஈடுபட இருக்கும் நாம் ஒருவரை ஒருவர் அறியாமல் ‘யாரோ எப்படிப் பட்டவரோ?” என்று எண்ணிக் கொண்டிராமல், நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம் என்று இந்த முதல்நாள் சந்திப்பில் கருதுகின்றேன். நான் அ. இங்கு தமிழாசிரியன்; இது என்னைப் பற்றி. இனி நீங்கள் ஒவ்வொருவராக எழுந்து உங்கள் பெயர், படித்த பள்ளி, ஊர் இவற்றைச் சொல்லி வாருங்கள். நமக்குள் அறிமுகமானதுபோல் இருக்கும் “என்று புன்னகை தவழச் சொல்லிவிட்டு முதல் வரிசையின் ஓரத்தில் ஒருவனைப் பார்த்தார்.

அவன் எழவில்லை. வேறு யாரும் எழவில்லை. சற்று நேரம் ஆழ்ந்த அமைதி நிலவியது. அந்த அமைதியை எதிர்பார்த்தவர்போல் புன்னகை வழிய ஆசிரியரே மறுமுறையும், “இது எனக்குப் பழக்கமானதுதான். ஒவ்வொரு ஆண்டிலும் இப்படித்தான் புதிய மருமகள் மாமியார் வீட்டிற்குப் போனதும் இரண்டொரு நாட்கள் அடக்கவொடுக்கமாய் இருப்பதுபோல் கல்லூரிக்குள் நுழைந்ததும் மணப்பெண்போல வாய் பேசாது சில நாட்கள் இருப்பார்கள். பின்னர் மாமியார்க்காரி கண்டு அஞ்சுவதுபோல் சில மருமகள்மார் மாறிவிடுதல் உண்டு. அதைப் போல் இங்கேயும் சிலர் பின்னால் மாறுவது உண்டு” என்று சொன்னார். இந்த உவமையைக் கேட்டதும் மாணவர்கள் ‘கொல்’ லென்று சிரித்து தங்களைச் சுற்றிப் பிணைந்து இருந்த அந்தப் புதுமையைக் கொஞ்சம் விடுவித்துக்கொண்டனர்.

இது அவர்களுக்குப் புதிது; வகுப்பறையில் இதுவரை அவர்கள் கேட்டுப் பழகிய முறை ஒன்று. இது அதிலிருந்து மாறுபட்டிருக்கின்றது. ஆசிரியர் மாணவர் என்ற முறையைவிட வயது முதிர்ந்த தோழரோடு பழகும் தன்மையில் அங்கு ஒரு உணர்ச்சி மாணவர்களின் உள்ளத்தில் எழுந்தது. ‘இதுதான் கல்லூரி’ என்று ஞானசம்பந்தன் தெரிந்துகொண்டான்.

அடுத்து கணிதம், அதன் பின்னர் ஆங்கிலச் செய்யுள், மாலையில் விஞ்ஞானத் துறை என்று வகுப்புக்கள் வந்தன. குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வகையில் அவ்வகுப்புக்களில் ஞானசம்பந்தன் ஒன்றையும் காணவில்லை; காரணம் அந்த வகுப்புக்கள் எல்லாம் ஆங்கில மொழியிலேயே நடைபெற்றன. ஆசிரியர்க்கும் மாணாக்கர்க்கும் ஆங்கில மொழியில் எவ்வளவு பயிற்சியும் புலமையும் இருக்கின்றது என்பதனை எடுத்துக் காட்டிக்கொள்ள அந்த வகுப்புகள் பயன்பட்டனவேயன்றி உணர்ச்சி நிரம்பிய வகுப்புகளாகவோ, உயிரோட்டம் மிக்கவையாகவோ காணப்படவில்லை. ஏதோ கடமைக்காக நடந்தவைபோன்ற ஒரு எண்ணம் மாணவர்களின் மனதில் எழுந்தது.

அந்தக் கலைகளை எல்லாம்கூட தமிழில் சொல்லித் தந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று மாலை மாணவர் உணவுக் கூடத்தில் இரண்டொருவர் பேசியதைக் கேட்ட ஞானசம்பந்தன் “ஆமாம் நன்றாக இருப்பதோடு, நன்றாக விளங்கும்” என்று தனக்குள் எண்ணிக் கொண்டான். யாரும் பழக்கமில்லாததால் வெளியில் சொல்லவில்லை. இதைப்போல் எத்துணையோ பேர் எவ்வளவோ கருத்துக்களை யாரிடம் சொல்வது, எப்போது சொல்வது, எப்படிச் சொல்வது என்று தெரியாமல் அவற்றை தங்கள் மனத்திலேயே போட்டுப் புதைத்துவிடுகின்றனர். அதன் மீது மறதி மண்மூடி, வாழ்க்கை மேடு ஏற்பட்டவுடன் அந்த மேட்டில் கவலைச் செடிகளும் கொடிகளும் கப்பும் கிளையுமாகச் செழித்துப் படர்ந்து இடம் பெற்றுவிடுகின்றன. கருவாகியிருந்த கருத்து காயாமல், கனியாமல் கருகிப்போகின்றது. அதுதான் உலகம்!

“வேறு எதைப் பற்றி எழிலனிடம் சொல்வது?” என்று கடந்த சில நாட்களில் நடந்தவற்றைப் பற்றி எண்ணிப்பார்த்தான். உலகம் ஒன்று வெளியில் இருக்கின்றது. அதில் வாழ்வுக்கும் சாவுக்கும்இடையில் பெரும் போராட்டம் ஒன்று நாள்தோறும் நடந்துவருகின்றது, என்பதே தெரியாத சில மாணவர்களின் கோலத்தைப் பற்றிச் சொல்வதா? கல்லூரியின் பல்வேறு முறைகளை அமைப்புகளைச் சொல்வதா? என்று பலவகையாக எண்ணி எண்ணிப் பார்த்து சற்றுநேரத்தில் அலுத்து உறங்கிப்போனான்.

மறுநாள் வெள்ளிக்கிழமை போனதே தெரியாமல் ‘விடு விடு’ என்று கழிந்துவிட்டது. கடைசி மணிநேரம் ஆசிரியர் வராததால் பாடம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ‘பாடம் இல்லை’ என்று கல்லூரித்தொண்டன் வந்து சொன்னதும் முதலில் யாருக்கும் என்ன சொல்வது என்று தோடவில்லை. உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு ஆசிரியர் இல்லை என்றால் வேறு யாராவது வந்து அந்த நேரத்தில் ‘ஏதாவது’ நடத்துவார்கள். ஏதும் நடத்துவதற்கு இல்லையெனில் நேரத்தையாவது கடத்துவார்கள். ஆனால் கல்லூரிகளில் ஆசிரியர் இல்லை என்றால் பாடமும் இல்லை என்பதைக் கேட்டதும் புதியவர்களான அவர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. எல்லோரும் வீட்டுக்குப் போவதா கூடாதா என்பதுகூட தெரியாமல் உட்கார்ந்திருந்தனர். உற்ற நேரத்தில் வந்து உதவி செய்யும் தொண்டர்கள்போல் அந்த ‘தவறிவிட்ட இரண்டொருவர்’ வீட்டிற்குத்தான் போக வேண்டும் என்பதனைத் தங்களுடைய அநுபவத்தைக் கொண்டு உறுதி செய்தபின் அந்த வகுப்பு கரைந்தது.

‘எந்தப் படத்திற்குப் போகலாம்?’ என்று கேட்போருக்கு விடையாக, ‘இதுதான் நன்றாக இருக்கிறது. ஆனால் அதில் நுழைவுச்சீட்டு கிடைக்காது. அதனால் இங்கே போகலாம்’ என்போரும் ‘மெரினாவுக்குப் போகலாமா?’ என்று ஒருவன் கேட்க மற்றொருவன் இல்லை நான் இன்று எங்கள் அத்தை வீட்டுக்குப்போகின்றேன்’ என்று சொல்லுவதும், ‘உனக்கென்னப்பா அத்தை வீட்டில் அழைப்பு...ஊம்’ என்று அவனைக் கண்டு வேறு ஒருவன் ஏங்குவதுமாக அந்தக் கூட்டத்தில் பலவகையான ஒலிகள் எழுந்து எழுந்து ஆர்த்தது.



பன்மொழிப்புலவர் பொன்விழா நிதிச்

சிறப்புக் கூட்டம்

17-11-57 ஞாயிறு காலை 10 மணி

இடம்: மயிலை இராஜராஜேஸ்வரி பாடசாலை
(மயிலை. பெரியகுளம் பஸ் ஸ்டாண்டு அருகில்)

★

பேச்சாளர்கள் :

அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்
கண்ணதாசன்

★

கட்டணம் : 2, 1 அணா 8.

★

தி. மு. க. 45வது வட்டம்,
மயிலை.



சேது சமுத்திரத் திட்டம்

அன்புள்ள ஆசிரியர்
அவர்களுக்கு,

வணக்கம். கடந்த மூன்று நாட்களுக்குமுன்பு சென்னை சட்ட மன்றத்தில் கேள்வி நேரத்தின் போது 'சேது சமுத்திரத்திட்டம் பற்றி' பிரச்சினை கிளம்பியிருக்கிறது.. ஆனல் நாங்களெல்லாம் எதிர்பார்த்தபடி அந்தப் பிரச்சினை உருப்பெறவில்லை. அமைச்சர் கக்கன் அவர்கள் வெகு எளிதில் அலட்சியமாகப் பதில் சொல்லிவிட்டார். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேது சமுத்திரத திட்டம் இடம்பெறவில்லையாம்! இந்தச் செய்தியை வெளியிடும்போது அமைச்சர் உள்ளத்தில் கொஞ்சமேனும் கவலை பிறந்ததாகத் தெரியவில்லை.

ஒருவேளை, அமைச்சர் கக்கன் அவர்களுக்கு சேது சமுத்திரத் திட்டம் என்ருலே என்ன என்று தெரியாமலிருந்தால் என்ன செய்வது?

சென்ற மந்திரி சபையில் அங்கம் வகித்த இராமனுதபுரம் சேதுபதி அவர்கள் அந்தத் திட்டம் பற்றி அடிக்கடி நினைவுறுத்தி வந்திருக்கிருர்கள். சர்க்கார் அதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொரு அமைச்சரும் தங்கள் தங்கள் சொநத செல்வாக்கை எப்படி எப்படி பலட்படுத்துவது என்ற செயலிலே தான் ஈடுபட்டிருக்கிருர்களே தவிர பொதுக் காரியத்திலே அவர்களுக்கு நாட்டமில்லை - அறவே இல்லை. சென்னை அமைச்சரவையில் விரல்விட்டு எண்ணக்கூடிய மூன்று பேர்தான் மின்னிக்கொண்டிருக்கிருர்கள்.

தன்னேடு ஆரம்ப காலந் தொட்டு உழைத்து வந்தவர்களில் யார் யாருக்குப் பதவியைக் கொடுத்தால் கடைசிவரை 'ஜே' போடுவர் என்று ஒருவர்கணக் கிட்டுக்கொண்டிருக்கிருர்; அவர் முதல்வர்.

இன்னொருவர் தன் சொந்தத் தொகுதியைப் பலப்படுத்துவதிலேயே இருக்கிருர்.

மூன்ருவது நபர், வேண்டியவர்களுக்கும் உறவினர்களுக்கும் உத்தியோகம் வாங்கிக் கொடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கிருர்.

— மக்களைப்பற்றியோ நாட்டுக்கான நல்ல திட்டம்பற்றியோ இவர்களுக்கென்ன கவலை!

மேற்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து சென்னைக்கோ, அல்லது சென்னையிலிருந்து மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்கோ கப்பல்மூலம் எடுத்துச் செல்லப்படும் எந்தப் பொருளுக்கும் இலங்கை சர்க்காருக்குத் தீர்வை கட்டித்தான் அப்பால் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இதனல் இந்திய சர்க்காரின் பொருள் விரயமாகிறது. காரணம், போகும் கப்பல்கள் இலங்கைத் துறைமுகத்தைப் பிடிக்காமல் போவதற்கு மார்க்கமில்லை. அல்லது இலங்கையைச் சுற்றிப் போக வேண்டும். இந்த நிலையை மாற்றி அதற்கான ஒரு வழியைக் காணுவதுதான் சேது சமுத்திரத் திட்டம் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த அளவு அமைச்சருக்குத் தெரிந்திருந்தால்கூட பொறுப்பற்ற முறையில் பதில் சொல்லியிருக்கமாட்டார்.

இதுபற்றி நமது கழக எம். எல். ஏ.க்கள் சட்ட சபையில் பேசுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிருேம். வணக்கம்.

அன்புள்ள
பாகனேரி. உ. பில்லப்பன்

வெண்பாப் போட்டி-8.

"காய்" என்று எடுத்து "பழம்" என்று முடிக்கவும்.

அமைப்பு இப்படி :

காய்... —— —— ——
—— —— —— | ——
—— —— பழம்.

['காய்' என்பது, காய்ந்து, காய்த்து என்பதுபோலவும் வரலாம்.]

முடிவு தேதி 30-11-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

சம்பாதிக்கிருேம்.
செலவழிக்கிருேம்.
அதில் ஒரு ரூபாய்...
இரண்டு ரூபாய்...
ஐந்து ரூபாய்...
தமிழையே கற்று
தமிழுக்கே உழைத்து
தமிழ் வடிவில் இயங்கி,
கொள்கைபற்றுக் கொண்டு
தடியடிகளைத் தாங்கி,
வறுமையில் அவதிப்படும்
மாபெரும் புலவருக்குத்
தரக்கூடாதா?
அண்ணு பொருளாளர்
நாவலர் செயலாளர்
விழாக்குழு உருவாகிறது.
உயிருள்ளபோதே மரியாதை.
உங்கள் பங்கு?
மனமிருந்தால் வழியுண்டு;
மனம் இருக்கிறதா?
செயல்படுத்துங்கள்.

நண்பர்களே,

பணம் வருகிறது.
பறந்து போகிறது.
சம்பாதிக்க ஓடுகிருேம்.

நிதி அனுப்ப முகவரி :

சி. என். அண்ணுதுரை,
'அறிவகம்'
24. சூரியநாராயண செட்டி தெரு,
சென்னை-13.

— 4ம் பக்கத் தொடர்ச்சி —

ஒளிவு மறைவின்றி ஏற்றுக் கொள்கிருர். இவை சரியோ, தப்போ என்ற ஆராய்ச்சியல்ல, இங்கே கவனிக்கத்தக்கது. ஆரிய திராவிட வேற்றுமைகளை நன்கறிந்த பின்னும் ஹார்வார்டு பல்கலைக் கழகத்தின் இச்சீரிய பட்டதாரி, தாம் ஆரியர் என்பதையும் மறந்துவிடவில்லை. நம் பாரத தேசியம் ஆரிய தேசியமே என்பதையும் வற்புறுத்தத் தயங்கவில்லை. அந்த ஆரிய தேசியத்தில் திராவிடருக்குரிய இடம், ஆரிய ஆட்சியை ஏற்றமைந்து, அதற்கு அடிவருடி வாழ்வதே என்பதை இந்த ஆரிய சோதி ஒப்புக்கொள்ள முடிகிறது.

தென்னுட்டில் முற்போக்கான எண்ணம்-குறைந்தபடி உயர்ந்த ஆங்கிலப்படிப்பு - உடைய பலர் தம் பெயரின் பின் உள்ள ஐயர், ஐயங்கார் என்ற பட்டங்களைத் துண்டித்து எழுதுவதையே நாகரிகமாகக் கொண்டுள்ளார்கள். ஆனல் ஜவஹர்லால் நேருவோ இன்னும் பண்டித என்ற அடைமொழியுடனே நாட்டு மக்களிடையே அறிமுகப்படுத்தப்படுகிருர். 'பண்டித' என்பது தென்னுட்டில் வேறு குலத்தவர் அடைமொழியாகப் பயன்படுத்தப்படினும், அதுவே வடதிசையில் ஐயர், ஐயங்கார் போன்ற ஆரிய முதல் வருண் அடைமொழிக்கும். 'பண்ட்', 'பண்டா' என்பவையும் இதன் திரிபுகளே.

'ஆரியமாவது திராவிடமாவது, இன வேறுபாட்டை இந்த இருபதாம் நூற்ருண்டிலும் யாராவது கிளப்புவார்களா?' என்று கேட்க வேண்டியவர்கள் பாரத பக்தர்களோ, சனுதனிகளோ அல்லது மற்ற அகில இந்திய, அகில உலக இயக்கத்தவர்களோ, அல்ல. திராவிட இயக்கத்தவர்களே. இனவேற்றுமை பாராட்டாத இனம் திராவிட இனம், மனித இனத்தை ஒரு குடும்பமாக்கி, உலகை ஒருலகாக்கி, ஒருலகடிப்படையில் ஒரு கடவுள் கண்ட இனம் அது. ஆனல் அது குறிக்கொள்ளும் ஒருலகம், ஓரினம் 'ஓநாய்' குறிக்கொள்ளும் ஒருமையல்ல. ஓரினத்தை ஓரினம் விழுங்கி அடிமைகொள்ளும் ஓரின ஒற்றுமையல்ல. இனவரம்பழித்து, உலகை, தேசியத்தை, ஓரின வேட்டைக் காடாக்கும் ஒற்றுமையன்று. அது எல்லா இனங்களையும் சரி சம உரிமையுடையவையாக மதித்து, எல்லா இனங்களுக்கும் தத்தம் தன்னுரிமை, தன்னுட்சியுரிமை தந்து, அன்பு அடிப்படையிலே, நேச உறவடிப்படையிலே ஒற்றுமையை உண்டுபண்ண விழைகிறது. இந்த அடிப்படையில் தான் தமிழர் யவனர் என்ற பண்டைக் கிரேக்க, உரோம நாட்டினருடனும் சீனருடனும் அராபியருடனும் தொடர்பு கொண்டிருந்தனர். அதே அடிப்படையில் தான் பாரதப் பரப்பிலோ கீழ்திசையிலோ, வேறு எந்தப் பரப்பிலும் இல்லா அளவில் வந்த,வந்தவர்களுக்கு ஆதரவும், இனஉரிமையும் பண்பாட்டுரிமையும், மொழி உரிமையும் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

- தொடரும்



நூல் நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை காத்தேந்திக் குடியன்காணும்
மாறுத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
ததகத்ப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

டாக்டரம்மா

இந்த நூலின் ஆசிரியரான திரு. கே. ஏ. **மதியழகன்** அவர்களை, தமிழகம், சிறந்த பேச்சாளரென மதிக்கிறது; கழகத்தின் செயல் வீரரெனப் போற்றுகிறது; ஆக்க வேலைகளில் முன்னோடி எனக் கௌரவிக்கிறது. ஆனால் அந்த அளவுக்கு அவரை எழுத்தாற்றல் மிக்கவர் என்று திராவிடம் எண்ணுகிறதா என்பது சந்தேகத்திற்குரியதுதான். இதனால், நாடு அவரை உணரத் தவறிவிட்டது என்பது அல்ல பொருள்; மதியழகன் அவர்கள் எழுதுவதை அறவே நிறுத்திவிட்டதே அந்த நிலை ஏற்பட்டதற்குக் காரணமாகும். ஒருகாலத்தில் அவருடைய அறிவு விளக்க நூல்கள் மாணவருலகை பெரிதும் கவர்ந்தன.

நன்றி யாருக்கு?
அறிவின் தூதர்கள்
அவதூறு வழக்கு

- ஆகிய நூல்களை கழகத் தோழர்கள் கேடயமாகக் கொண்டிருந்தார்கள். அவருக்கென அவரே தயாரித்துக்கொண்ட உயிரோட்டமுள்ள வார்த்தைகளால் கோர்வை செய்யப்பட்ட அவரது கட்டுரைக் களஞ்சியங்கள் படிப்போரைப் பரவசத்திலாழ்த்தி புதுணர்ச்சி பெற வைத்தன. கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளாக அவர் எழுதவில்லை. நூல்கள் வெளி வரவில்லை - நமக்கு நன்றாக நினைவிருக்கிறது.

அண்மையில் அவரது நூல் ஒன்று வெளி வந்திருக்கிறது. அதன் பெயர் டாக்டரம்மா என்பது. அதில்,

முதல் டாக்டரம்மா
வெந்தணலில்
கவிழ்ந்த படகு
கேரளகீதம்
ஒரே நிலவு
மேகமண்டலந் தாண்டி
கரிபால்டி

- முதலிய கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. எந்தக் கோணத்திலிருந்தும் கட்டுரைகளில் சோடை காண முடியாது. நடையும் அப்படி. பொருளும் அப்படி.

நூலை திருச்சி **திராவிடப் பண்ணையார்** வெளியிட்டிருக்கிறார்கள். நூல் வெளியிடும் முறையில் அவர்கள் சிறப்புப் பெயர் பெற்றவர்கள். நூலின் விலை 1-0-0. 80 பக்கங்கள்.

ஒரு நூலைப் படித்தால் அதனால் நாடும், மக்களும் நலம் பெற இருக்க வேண்டும். அது இந்த நூலில் இருக்கிறது.

கிடைக்குமிடம்:—
திராவிடப் பண்ணை,
தெப்பக்குளம், திருச்சி.

★

திராவிடர் ஆட்சி முறை

இராசை. கி. அரங்கசாமி அவர்கள் இந்நூலை இயற்றியிருக்கிறார்கள். திராவிடர்களின் திட்டமும் செயலும் இந்நூலில் வெண்பா வடிவில் அமைந்திருக்கிறது.

திராவிடர்களின் வாழ்க்கை, ஆட்சி மன்றம், ஆய்வு மன்றம் ஆகியவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார் ஆசிரியர்.

ஒரே ஒரு குறை-நூல் அழகுற வெளியிடப்படவில்லை. நூலுக்கு அழகும் வேண்டுமல்லவா!

கிடைக்குமிடம்:—
திருக்குறள் பதிப்பகம்,
[illegible]ராசிபுரம் (சேலம் மாவட்டம்).

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

கொண்டுவந்து விடுகிறாள்! கண்ணன்! கண்ணன்! இந்தப் பெயர் செல்லத்தின் இதய நரம்புகள் ஒவ்வொன்றிலும் பின்னுக்கிடந்த பிரியத்தைக் கிளறிக்கொண்டிருந்தது.

கண்ணன், வேறு யாருமில்லை. செல்லத்தின் வாழ்வைச் சுருள வைத்துவிட்ட தோட்டத்து முதலாளியின் செல்லப்பிள்ளைதான். அந்தப் பெரிய இடத்துப்பிள்ளையின் பிரியம்தான் இந்தக் குடிசைக்காரியைப் பிடித்திருந்தது. மாளிகைக்கும் மண்குடிசைக்கும் காதலென்பது பரம்பரை நியதிபோலும்! அதனால் தானே இரண்டும் பக்கத்திலே நிற்கின்றன. கண்ணன் பணக்கார வீட்டுப்பிள்ளையான போதிலும் ஓலைக்குடிசைகளிலே வீசும் காற்றையே விரும்புவான். சாக்கடையோரத்திலே சந்தனக்கட்டை வளர்ந்துவிடுகிறதல்லவா, அந்த மாதிரியே முதலாளிக்கு மகனாகப் பிறந்துவிட்டான் கண்ணன். மனம் ஒரு ஈரமான பாதை. நினைவுச்சக்கரம் அதிலே அழுந்திப்பதியும்போது காலஓட்டத்தால்கூட அதை மாற்ற முடிவதில்லை. செல்லம் நினைவலைகளிலே நீந்தினாள், காதலன் வரவை எதிர் நோக்கி!

விடுமுறைக்கு ஊர் வந்த கண்ணன் விரைந்துசென்றான் செல்லத்தைக் காண. பல மாதங்கள் பிரிந்திருந்த மனம் காதலியைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவலில் குதித்தது. காதலியைச் சந்தித்து என்னென்ன பேசவேண்டும். எப்படியெப்படி அவளைச் சிரிக்க வைக்க வேண்டும் என்றெல்லாம் மனப்பாடம் பண்ணி வைத்திருந்தான். ஆனால் நேரிலே காணும்போது மட்டும் ஏன் நினைத்திருந்த வார்த்தைகள் வெளிவருவதில்லை. இந்தச் சோதனைக்கு பலதடவை ஆட்பட்டிருக்கிறான் கண்ணன். ஆனால் அன்று மட்டும் அவன் இதயமே முறிந்து விழும்போலத் தோன்றியது. எந்தக் கண்கள் ஒளிக்கூடமாக இருந்தனவோ அந்தக் கண்கள் சக்தியற்றவையாகிக் கிடந்தன. புழுப்போல பாயிலே வளைந்து கிடந்த செல்லத்தை வாரித் தூக்கினான்.

செல்லம் அழுதாள். கண்ணன் அழுதான். இருவர் கண்ணீரும் ஆக்கியப்பட்டுச் சிதறித்தெறித்தது. இப்படிப்பட்ட சோகச் சம்பவங்கள் வாழ்வைச் சுற்றும்போது எத்தனையோ காதலர்கள் தங்கள் காதலை வாபஸ் பெறுவதுண்டு. கண்ணனைப் பொறுத்த மட்டிலும் காதல் அவனுக்கு மணிமுடி, மாற்ற முடியாதது.

அத்தான்...அத்தான் நான் உங்களுக்குத் தகுதியற்றவளாகிவிட்டேன். என்னை மறந்துவிடுங்கள்- விம்மலும் வார்த்தைகளும் இணைந்தே வெளி வந்தன.

அன்பே, அப்படியெல்லாம் சொல்லாதே. உன்னை என்னால்மறக்கவே முடியாது. என்றோ, அறியாத பருவத்திலே இதயங்களில் அழுத்தப்பட்ட அன்பை என்னால் அங்கிருந்து அகற்றவே முடியாது. நான் உன் உள்ளத்தையே விரும்புகிறேன். அது நிறைந்திருக்கிறது. அதுவே போதும்- எவ்வளவோ பேசினான் கண்ணன். அவ்வளவும் அயர்ந்து கிடந்த அவளுக்கு புது பலத்தைத் தந்தன.

செல்லம் கனவுலகத்திலே மிதந்தாள். கண்ணனின் ஒரு புன்னகையின் மீது எத்தனை யெத்தனை வருங்காலத்தை உருவாக்கினாள். காதல் மாளிகை கட்டினாள், கலியாண அலங்காரம் செய்தாள், குடும்ப விளக்காகிப் பிரகாசித்தாள், குழந்தையின் நடை கண்டு மகிழ்ந்தாள். கண்ணனுக்கும் அவளுக்கும்காதல் என்கிற தத்துவத்தை அவள் உணர ஆரம்பித்தது முதல் இத்தகைய கனவுகளை எழுப்பினாள். எதிர் காலம் இவற்றையெல்லாம் நிறைவேற்றித் தருமா கண்ணனின் வாழ்வோடு தொடர்ந்து செல்லத் தனக்குத் தகுதி உண்டா-இடுக்கிக்குள் அகப்பட்ட எலியாக அவளின் எண்ணங்கள் தவித்தன.

தான் வாழாவிடினும் தன்னைக் கவர்ந்த காதலனின் வாழ்வு தழைத்துத் திகழ வேண்டும்- இதுவே அவள் கற்பித்துக்கொண்ட காதல் தத்துத்துவத்தின் முடிவு.

செல்லத்தின் கண்களால் காண முடியாத பயங்கர இருட்டு...அவள் சிந்தனைகள் ஏதோவொருமுடிவைச் சுற்றிச் சுற்றி வந்தன. உலகம் அவளைப் பார்த்துக் குருடி, குருடி என்று சிரித்தது. அவளும் உலகத்தைப் பார்த்த உரக்கச் சிரிக்கத் துணிந்துவிட்டாள். வாழ்க்கை முழுவதையும் வேதனையின் கோர நகங்களுக்கிடையே கழித்துவிட்ட தன் அம்மாவிடம்கூடச் சொல்லாமல் செல்லத்தின் கால்கள் எங்கோ தட்டுத் தடுமாறி நடந்தன. கண்ணன் என் ராஜா என்ற வார்த்தைகள் மட்டும் செல்லம் சென்ற வழியெல்லாம் கேட்டது.

தன் செல்லத்தின் கனவுகளை நிறைவேற்றத் துடித்த கண்ணனால் அடுத்த நாள் அவளது பிணத்தைத் தான் காண முடிந்தது. எந்தக் கிணறு அவளைக் குருடாக்கியதோ அந்தக் கிணற்றின் பாறைகளுக்கிடையே அந்தத் தங்க உடல் சிதறிக் கிடந்தது. அந்த ஏழை கண்ணனின் எண்ணத்தில் எழுதிய காதல் காவியம்மட்டும் அழியாது கிடந்தது. அவளுக்காக அவன் அழுதான் அதுதானே அவனால் முடிந்தது!

நரம்பு உருவாகிக் கிடந்த பூரணத்தின் கன்னங்களிலே கண்ணீர் வடிந்து சென்ற தடம் தெரிந்தது. அந்தக் கண்ணீரின் சூடு பற்றிய நிலையை உணர அந்தக் கிழவியின் உடலிலே உயிர் இல்லை! அவள் குடிசையில் வாழ்ந்தாலும் அவள் இதயம் கற்புக் கோட்டையாக விளங்கியது.

புதிய முகவரி

தில்லை-வில்லாளன், எம். ஏ.
72-73, கடைத் தெரு,
சிதம்பரம்.

நவம்பர் இதழ்
முல்லை
விற்பனையாகிறது!
★
விலை: எட்டணா

பன்மொழிப்புலவர் பதில் தருகிருர்

ஆர். எஸ். பிரகாசம்
பரமக்குடி

(அ) "கல்லாடம் படித்தவருடன் சொல்லாடாதே" என்று கூறுகின்றனரே; அப்படியென்ருல் அதன் சிறப்பியல்புகள் யாவை? இயற்றிய ஆசிரியர் யார்?

(அ) இலக்கியம் கண்டு இலக்கணம் இயற்றப்படுவது இலக்கணம் என்று மிகப் பழமையான இலக்கணச் சூத்திரங்களே கூறுகின்றன. ஆனுலும் சங்க காலத்திலிருந்தே இலக்கணத்தின் மதிப்பு உயர்ந்தது. இலக்கணத்தைக் கொண்டு இலக்கியத்தை மதிப்பிடும் வழக்கமும் எழுந்தது. இந்த இலக்கண விதிகள் யாவற்றுக்கும், துறைகள் யாவற்றுக்கும் உரிய இலக்கியச் சான்றுகள் தேடுவது அருமையாக இருந்ததால், இலக்கணப்புலவர்களே சில சமயம் அத்தகைய சான்றுகள் தொடர்ச்சியாக வரும்படியாக காவியங்கள் புனைந்தனர். இலக்கியப்புலவர்களும் நாளடைவில் இத்தகைய செப்படி வித்தையில் இறங்கினர். கோவைகள் பலவும் இத்தகைத்தவை. இறையனுர் அகப்பொருள் இவ்வாறு சான்றுகளாகத் தந்த பாடல்களே. பாண்டிக்கோவை என்ற ஒரு முழுநூல். மற்றக் கோவைகளும் இந்நெறியையேபின் பற்றின.

கல்லாடம் சங்க காலத்தை அடுத்து, கி. பி. 4-முதல் ...ம் நூற்ருண்டுகளுக்குட்பட்ட ...தென்று கருதப்படுகிறது. இலக்கணத் துறைகளுக்கு இசைந்து இலக்கியமாக மட்டுமன்றி, இலக்கண விதிகள் பலவற்றுக்கும் சான்றுகள் அடங்கும் வகையில் அது புலமையிலக்கியமாகச் செய்யப்பட்டது. அத்தகைய இலக்கியங்களில் அது கிட்டத்தட்ட முதலாவதாக அமைந்தது. இன்றுவரை அது ஏறத்தாழ அத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்கிறது. இக்காரணங்களால் ஏற்பட்ட பழமொழியே 'கல்லாடம் படித்தவருடன் சொல்லாடாதே!' என்பது. கல்லாடம் படித்தவன் இலக்கியப்புலமையுடன் இலக்கணப்புலமையும் பெற்றவராகயிருத்தல் வேண்டுமாதலால், அவன் புலவர்களிடையே ஆற்றல்மிக்கவனுக விளங்குவான் என்பது கருத்து. கல்லாடம் இன்று கற்பதற்குக் கடுமையான ஏடு. வாழைக்கனிப்பக்குவம், பலாக்கனிப்பக்குவம், தேங்காய்ப்பக்குவம் என்ற அடுக்கப்படும் எளிமை—அருமைப்படிகளிலே அது தேங்காய்ப்பக்குவம் மட்டுமல்ல, வாதுமைப்பக்குவம் என்று கூறத்தக்கது. பெரும்புலமையுடனும் கடு முயற்சியுடனும் அறிபவருக்கு உள்ளார்ந்த நுண் அவை நுட்பவல்லது. ஓரிரு தலைமுறைகளுக்குமுன் வளர புலவருலகில் அது பெருமதிப்புப் பெற்றிருந்தது.

சங்க இலக்கியமும் காவியங்களுமே, பொதுமக்களிடையே அருகி வழங்கிய பிரிட்டிஷ ஆட்சித் தொடக்க காலத்தில் இது பெயர் மாத்திரமாய் நிலவி, பின் அந்த அளவிலும் அருகிவிட்டது. ஆயினும் சங்க காலத்தையடுத்த பழமையையும், சைவ சமய இலக்கியத்தின் தொடக்கக் கால நிலையையும் தெரிவிக்க அது இன்னும் பெரிதும் பயன்படத்தக்க ஏடேயாகும்.

இதனை இயற்றிய ஆசிரியர் கல்லாடர். இவர் சங்கப் புலவராகிய கல்லாடனுரல்லர், அதற்குப் பிற்பட்ட காலத்தவர் என்று கருதப்படுகிறது. கல்லாட நூல் சைவர் பதினொரு திருமுறை வகுப்பினுள் இடம்பெற்றுள்ளது.

(ஆ) கண்ணகி கோவில்கள் தான் பிற்காலத்தில் திரௌபதி கோயிலாக மாறியது என்று திரு. ம. பொ. சி கூறுகிருர். உண்மைதானு? என்ருல் எப்படி மாறியது?

(ஆ) திரு. ம. பொ. சி. கூறுவது உண்மை. வட இந்தியாவில் நாகபுரியிலும், மலையாள நாட்டிலும், இலங்கையிலும்கூடக் கண்ணகி கோவில்கள் இவ்வாறு மாறியுள்ளன. சில இடங்களில் தெய்வம் திரௌபதியம்மன் என்றும், சில இடங்களில் பகவதியம்மன் என்றும் சில இடங்களில் கற்புத் தெய்வம் என்றும் வழங்குகின்றன. சீனு, சப்பான்வரைகூட இந்தக் கற்புடை மகளிர் வீர வணக்கம் பரவியுள்ளது. தமிழில் சிலப்பதிகாரமன்றி வேறு பாடல்களும் கண்ணகி பெயராலும் பிற கற்புடை மகளிர் பெயராலும் இருந்தன என்றும் அறிகிருேம்.

மலையாள நாட்டில் கொடுங்கோளூரில் உள்ள கோயில் கண்ணகி கோயிலே என்பதற்குப் பல சான்றுகள் தருகின்றனர், மலையாள நாட்டு அறிஞர்கள். அம்மன் ஒரு மார்பற்றவளாகவே காட்சி தருகிருர். அவளுக்குக் குங்குமம் சாத்தப்படுவதில்லை, வெள்ளணியே சாத்தப்படுகிறது. அம்மன்மாருக்குத் தாலி பிற்பட்ட காலப் புது வழக்கமானுலும் அது இங்கே இன்னும் புகுத்தப்படா நிலையிலேயே உள்ளது. வழக்கமாக எல்லாப் பகவதியம்மன் கோயில்களிலும் சாத்தப்படும் செம்மலர் மாலை இங்கே வழங்குவதில்லை.

கண்ணகிக்காகச் சேரநாட்டில் செங்குட்டுவன் எடுத்த கோயிலே மேற்சொன்னகோயில் என்று கருதப்படுகிறது.

செங்குட்டுவன் கண்ணகி விழாவின்போது பறையூர்ச் சாக்கையர் ஆடிய சாக்கையர் கூத்தைக் கண்டு களித்தாள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இன்று வரை, இரண்டாயிர ஆண்டுகளாகியும், அதே பறையூர் அல்லது பறவூர்ச் சாக்கையர் குடி வட திருவாங்கூரில் இதே சாக்கையர் கூத்து வகையை சேரர் மரபில் வந்த திருவாங்கூர் அரசர் முன்னிலையில் ஆண்டு தோறும் ஆடி வந்துள்ளது. செங்குட்டுவன் காலத்துக்குமுன் இச் சாக்கையர், என்ன கதையைக் கூத்து அல்லது நாடகமாக நடித்தார்களோ, தெரியாது. ஆனுல் செங்குட்டுவன் ஆடப்பட்டது கண்ணகி கதையாகவே இருக்க வேண்டும். அதற்காக இளவளங்கோவடிகளால் இயற்றப்பட்டதே சிலப்பதிகாரமாகஇருத்தல் கூடும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, கிட்டத் தட்டச் சோழர் காலம்வரை இந்தச் சிலப்பதிகாரமே சாக்கையர் கூத்தாக நடிக்கப்பட்டு வந்தது. ஆனுல் கி. பி. 9-ம் நூற்ருண்டுக்குப்பின் சிலப்பதிகாரத்தின் மகிழ்ச்சி குறைந்து இராமாயண பாரதக் கதைகளின் மதிப்பு உயரத் தொடங்கிற்று. கண்ணகி கதை சாக்கையர் நாடகமாக நடிக்கப்பட்ட நிலைமாறி, அதே கூத்து இராம நாடகமாகவும் கிருஷ்ண நாடகமாகவும் நடிக்கப்பட்டு, இன்று மலையாள நாட்டில் 'கதகளி'யாக இயங்குகிறது.

சாக்கையர் கூத்தின் நிலையே கண்ணகி கோயில்களுக்கும் ஏற்பட்டது. கண்ணகி கதை இராம கதை, கிருஷ்ணன் கதை ஆனது போல, கண்ணகி கோயில் துரோபதை கோயிலாகவோ பகவதியம்மன் கோயிலாகவோ மாறிற்று. மாமல்லபுரம் மகாபலிபுரமானதும், பல்லவர் குகைக் கோயில்கள் பஞ்சபாண்டவர் கோயில்களானதும் ஆயிரை மலை ஐவர் மலை ஆனதும் கொல்லிப்பாவை மாயமான் ஆகியதும் போன்ற நிகழ்ச்சி இது.

★ ★ ★

— 6ம் பக்கத் தொடர்ச்சி —

பிறக்கும் எனக் கேட்க நேரிடுகின்றது.

ம. 10 "ஙகரம் மொழிக்கு முதலாகும் எனக் கூறும் ஒரு கட்சியினரும், ஙகரம் மொழிக்கு முதலாகாது எனக் கூறும் மற்ருெரு கட்சியினரும் இருந்தனர். அவ்விரு சாராரையும் **ஒன்று பட்டாலுண்டு வாழ்வே** என ஒன்றுபடுத்துதற்கே நன்னூலார்.........கூறிய அதனைக் குற்றமாகக் காட்டினுல் அறிஞர் உலகம் ஆதரிக்குமா?"

அ. ஙகரம் பற்றி மாறுபட்ட இரு சாராரும் எத்தனை முறை எங்கெங்கு போரிட்டு எத்தனை பேர் மாய்ந்தனர்? ஒரு பொருளின் இயல்புபற்றி இருவர் அல்லது இரு சாரார் மாறுபடின், அறிஞன் அல்லது ஆசிரியன், தவருன கருத்துடையாரைத் திருத்துவதா? கோமுட்டிச் செட்டியார் கூற்றுப் போல், மாணவர்க்கு மயக்கமுண்டாம் வண்டும் இரு திறம்படக் கூறுவதா?

ம. 11 "அங்ஙனம் என்று கூறவே தொன்று தொட்ட மரபாகும் என்க."

அ. "ஆங்கனமாகிய வாதிரைகையால்" என்று மணிமேகலையிலும் (16; 128), "ஆங்ஙனம் விரிப்பின்" என்று தொல்காப்பியத்திலும் (1308) வந்திருப்பதால், நெடின முதல் வடிவமே முந்தியதென்பது பெறப்படும். தொல்காப்பியம் மணிமேகலைக்கு முந்தியதாயினும், ஆங்ஙனம் என்பது ஆங்கனம் என்பதன் திரிபென்பது ஆராய்ச்சியால் தெளிவாம். அங்கிட்டு, இங்கிட்டு என்னும் சொற்கள் முறையே, அங்ஙோட்டு இங்ஙோட்டு என மலையாளத்தில் வழங்குவது கவனிக்கத்தக்கது. ஆங்கனம் ஆங்ஙனம் என்னும் வடிவங்களே, முறையே, அங்கனம் அங்ஙனம் எனக் குறுகி வழங்குகின்றன. இங்ஙனமே, இங்கனம் இங்ஙனம் முதலியனவும், இவையெல்லாம், பாண்டி நாட்டு வழக்கை யறிந்த சொல்லாராய்ச்சியாளர்க்கன்றிப் பிறர்க்குச் செவ்வன் விளங்கா.

ம. 12 "இடு குறிப் பெயர், காரணப் பெயர், காரண இடுகுறிப் பெயர் என்ற இவற்றின் வேறுபாட்டைச் சூடாமணி நிகண்டு முதலிய பண்டைய நூல்களை ஓதியுணர்ந்தவர் மறுக்க முன் வரமாட்டார்."

அ. சூடாமணி நிகண்டு மண்டலபுருடன் என்னும் சமணர் 16-ஆம் நூற்ருண்டில் தொகுத்த சொற்பொருட்டொகுதி. அது இலக்கண நூலுமன்று, பண்டைய நூலுமன்று. ஆதலால், அதை அளவையாகக் கொள்பவர் தமிழியல்பை யறியார் என்பது தேற்றம்.

1. ஆங்கனம் என்பது ஆங்கு-அனம் எனப் பிரியும்.
2. அங்கிட்டு என்பது அங்கு-இட்டு எனப் பிரியும்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே." என்னும் தொல்காப்பியர் உண்மையானதாம்.

முடிவு "நன்னூல் நன்னூலே!" என்னுங் கட்டுரைக்கு உண்மையில் எதிர் மறுப்புத் தேவையில்லாவிடினும்,

"பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் கொல் குறும்பும்" சேரவியலும் இற்றைத் தமிழ்நாட்டின் சீர்கெட்ட நிலை நோக்கி, தமிழ் மாணவர் மருள் நீங்கித் தெருளும் வண்ணம் தென்றலிதழின் கட்டுரையிடச் சிறுமைக்கும் என் ஒழிவு நேரக் குறுமைக்கும் ஏற்ப, 'சுருங்கச் சொல்லல்' முறையில், ஓரளவு வரைந்தேன்.

தமிழ்நாடு தமிழுக்குச் சிறப்புரிமையின்றிப் பொது நாடாயிருக்குமளவும், தமிழ்க் கொள்கைகள் தலையெடா. அறியாமையிலும் அடிமைத்தனத்திலும் மயங்கிக் கிடக்கும் இளங்காளையர் உள்ளம் தளிர்ப்பெய்துமாறு, தென்றல் வீசுகின்றது. தெளிந்தெழுக.

இதனுல், நன்னூல் அறவே தீநூல் எனபதன்று. அதிலும் சில நற்கூறுகள் உள. ஆயின், தமிழின் உயிர் நாடியான தனித் தன்மைக்கும் தமிழ்மொழி நூலுண்மைக்கும் மாருன பல கருத்துக்கள் உண்மையின், அது முற்றும் நன்னூலன்று என்பதே, "நன்னூல் நன்னூலா?" என்னும் கட்டுரைக்கும் இம்மறுப் பறுப்பிற்கும் முடியும் என்க. ★



7. சாதியினால் தோன்றும் தடை.

ஒற்றுமையும் உள்வலியும் ஓங்குபுகழ் நல்வாழ்வும்
நற்றமிழும் பண்பாடும் நம்கலையும்–உற்றழிக்க
ஏதிலார் ஈன்றெடுத்(து) ஏவிவிட்ட பேயாகும்
சாதியினால் தோன்றும் தடை.
—ந. ஜாபர், சித்தயங்கோட்டை,

❁

காலணியை மாட்டிக் கரத்திற் குடையேந்தி
சீலமுடன் வீதிவழி சென்றிடவும—ஞாலமதில்
நீதியிலை! அச்சச்சோ! நீங்காதோ தீதிழைக்கும்
சாதியினால் தோன்றும் தடை!
—து. சுப்பராயலு, பெரியகுளம்.

❁

ஒன்றே குலமென் றுணர்ந்திடவும் ஒன்றுபட்டு
நின்றவிளங் காதல் நிலை பெறவும்—அன்றுமல்
ஓதி யுணர்ந்தோர் உயர்ந்திடவும் இந்நாளில்
சாதியினால் தோன்றும் தடை.
—ந. பொன்னரசு, வலங்கை.

❁

கண்ணோடு கண்பேசி கன்னல் மொழிபேசி
எண்ணிக் கழிக்கும் இரவுபல—என்றாலும்
திதிலாக் காதலர்கள் நன்மணத்தா லொன்றுபடச்
சாதியினால் தோன்றும் தடை.
—டாக்டர். எஸ். கந்தசாமி, ஒத்தக்கடை, மதுரை.

❁

காதலைத் தீய்த்துவிடும்; கண்ணியத்தைச் சாடிவிடும்;
கோதிலா நல்லோரைக் கொன்றழிக்கும்;—சூதுமிகு
பாதகராம் வேதியரைப் பாரில் உயர்த்திவிடும்
சாதியினால் தோன்றும் தடை.
—தாம்பரக்கிழான், சென்னை-1.

❁

தண்ணிலவும் நல்லொளியும் போலுள்ளம் ஒன்றுங்கால்
வண்ணமுகில் தோன்றி மறைத்திடுமோ—கண்ணே சொல்!
கோதிலா நம்காதல் குன்றொளியைக் கொய்திடுமோ
சாதியினால் தோன்றும் தடை?
—ச. குருசாமி, விருதுநகர்.

❁

பல்வளமும் பெற்றிடினும் பாரெல்லாம் போற்றிடினும்
எல்லாமும் வீணே ஏந்திழையே—பொல்லாத
சூதுசெயும்; மோதவிடும்; சூரனையும் சுட்டெரிக்கும்
சாதியினால் தோன்றும் தடை!
—அமுதன், சென்னை-2.

❁

அய்யகோ மெய்யுருகிப் போகுதே! எங்நீக்கம்
மெய்க்காதல் வஞ்சியோ டெண்ணும்போ—துய்யவும்
நாதியில்லை; நாண்மட்டக் கையை நறுக்குதே
சாதியினால் தோன்றும் தடை.
—கா. தவராசன், சேலம்.

❁

உள்ளத்தால் நாமிருவர் ஒன்றாய்க் கலந்ததன்பின்
எள்ளி நகைப்போர்தான் என்செய்வர்—தெள்ளமுதே!
காதற் கதிரவன்முன் காய்பனிபோல் நீங்காதோ
சாதியினால் தோன்றும் தடை?
—'சிந்தாமணி', கருப்பட்டிபாளையம்.

❁

வெட்டி முறித்திடுவோம் வேரறவே மாய்த்திடுவோம்
கொட்டி எரியிற் கொளுத்திடுவோம்—அட்டியிலை
ஆதிநாள் தொட்டே அமைந்தாலும் நஞ்சாகும்
சாதியினால் தோன்றும் தடை.
—குகன்குருசாமி, கமுதி.

❁

கண்மணியே! காவியமே கற்பூரப் பெட்டகமே!
வெண்மதியே! வேல்விழியில் வேதனையேன்?—உண்மையிதே!
காதலெனும் தீபட்டால் காய்சருகாய் வெந்தொழியும்
சாதியினால் தொன்றும் தடை.
—சின்னசாமி, காந்திநகர், மேட்டூர் அணை.

❁

ஆருயிரே! என்னெஞ்சின் ஆழத்தில் தான்பதிந்த
சீர்மயிலே ஓவியமே! அஞ்சாதே—ஆர்கடல்சூழ்
மேதினியில் வெல்லாதே மெய்யன்பை இப்பாழுஞ்
சாதியினால் தோன்றும் தடை.
—'தாரா', பள்ளப்பட்டி.

❁

பண்டுநம் பைந்தமிழர் பந்தமது கொண்டதுவும்
கொண்ட தமிழ்க்கொள்கை குன்றியதும்—கண்டக்கால்
வாதியாம் மாற்றார்கள் வந்ததன்பின் பார்க்கின்றோம்
சாதியினால் தோன்றும் தடை.
—மு. கோவிந்தராசன், கூத்தங்குடி.

❁

அண்ணாவின் சொற்படியே ஆர்க்கும் திராவிடத்தைத்
தண்டமிழின் கற்றோர் தனித்தாளத்—தண்டமிழீர்
கூடிடுவீர் பெற்றிடுவோம் பெற்றவுடன் தானேபோம்
சாதியினால் தோன்றும் தடை.
—பூவை. வெ. பிரேமையா, திருச்சி

❁

தாலித் துவண்டுவிழும் தங்கம் நிலைகுலைந்து
ஆவி துடிதுடிக்க வாயிற்றே—மேவவரும்
மாதினியாள் மாமுகத்தை மாற்றியதோ பாழுஞ்
சாதியினால் தோன்றும் தடை.
—தி. ப. சுப்பிரமணியம், திருப்பூர்.

❁

தாய்நாடு மாண்பிழத்தல்; தண்டமிழும் தாழ்ந்துபடல்;
தூய்தமிழர் ஒற்றுமையும் தூளாதல்;—வாய்ந்தபுகழ்
நீதிநெறி அத்தனையும் நேர்பிறழ்தல்; ஈதெல்லாம்
சாதியினால் தோன்றும் தடை.
—க. தங்கவேலன், சேர்மாதேவி.

❁

வல்ல தமிழறிஞர் வாக்கெடுப்பில் தோற்பதுவும்
பொல்லாதார் வெற்றி புனைவதுவும்—நல்லவளே!
சாதி வெறியால்தான்; சாமளவும் இந்நாட்டில்
சாதியினால் தோன்றும் தடை.
—ந. அலி, துறையூர்.

❁

தோழி! எதற்கிந்தத் துன்பம் தலைவிக்கு
ஆழி புயலதனுக் கஞ்சிடுமோ?—ஏழிதநங்
காதல் மணம்புரிவேன்! காசினியில் தூசெனக்குச்
சாதியினால் தோன்றும் தடை.
—சோ. கண்ணப்பன், பேரு.

❁

நம்நாட்டில் பூசல் நடுநடுங்கச் செய்கிறதே!
இம்மட்டில் நின்றால் இனிதாமே—நம்மக்கள்
பாதிக்கு மேலாய் பரதவிக்கும் கேடன்றோ
சாதியினால் தோன்றும் தடை.
—என். கிருஷ்ணசாமி, கீழ்பென்னாத்தூர்.

❁

பாலோடு தேன்கலந்து பக்குவமாய் உண்டாலும்
தோலோ(டு) உருக்கும் தொழுநோயே—ஞாலத்தில்
சாதிக்க நல்லவற்றை சான்றோர் முயன்றாலும்
சாதியினால் தோன்றும் தடை.
—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

❁

பூவாப் புதுமலராய், பொற்கலசப் பெண்ணமுதாய்
சாவாப் பெருமருந்தாய் நல்நோயாய்—நீதந்த
காதல் பெருமயக்கில் கட்டுண்டேன் ஏதினிமேல்
சாதியினால் தோன்றும் தடை?
—முத்துசண்முகம், சென்னை-21.

❁

சிந்தை திருத்தியெனைச் சீர்செய்த செல்வமே!
வெந்த புண்ணிலிட்ட வேலன்றோ—சந்ததமும்
வேதனையில் ஆழ்த்திநமை வேறாய்ப் பிரித்திட்ட
சாதியினால் தோன்றும் தடை?
—பூ. ச. கந்தசாமி, தாம்பரம்

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ.எல்.எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்